தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, மாசி 21 (4-3-'61) சனிக்கிழமை | இதழ் 37

இன்று புதியதாய்ப் பிறந்தோம்.

துவங்கிய வேதனை முடிந்தது.

தோழர்கள் கண்களைக் கவ்வியிருந்த இருள் மறைந்தது.

இங்கேயா? அங்கேயா? என்ற கேள்விக்குறி விலகிற்று.

இவர் காரணம் அவர் காரணம் என்ற பழியுரைகள் நின்றன.

அவசரப் பேச்சுக்கள் அரைகுறை விளக்கங்கள் அறிக்கைகள் ஓய்ந்தன.

இட்டுக் கட்டுதல், எடுத்தெறிந்து பேசுதல் ஆய காரியங்கள் முற்றி முடிந்தன.

நினைவு மயங்கி, நிலை தடுமாறிக்கிடந்த இளைஞர் உள்ளங்கள் தெளிவு பெற்றன.

பெரியதோர் சமுதாயத்திற்குப் புதியதோர் வழிபிறந்தது.

ஒரு விரலை நீட்டி எதிரியைக் குறை சொல்லும்போது, மூன்று விரல்கள் தம் பக்கம் திரும்பியிருக்கும் என்பதை—ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள்.

இரு பெருந்தலைவர்கள் மணிக்கரங்கோத்து இணைந்து நின்று ஒரு பாலம் படைத்தனர்.

அந்தப் பாலத்தின் மீது இளைய சமுதாயம் புதிய நடை போட்டது.

மூத்தவர் சொன்னார்;

இளையவர் ஏற்றார்.

இளையவர் சொன்னார்;

மூத்தவர் ஏற்றார்.

இருவர் கண்களும் கண்ணீர் சொரிந்தன!

அவர்கள் இருவரும் அன்பால் இணைந்தவர்கள்.

அவர்கள் பிழைப்பு அரசியலில் துவங்கவில்லை.

ஊரறியும்!

பாசத்தையே ஆயுதமாக வைத்து அனைவரையும் ஒன்று சேர்க்க வல்லவர் மூத்தவர்.

அதற்குரிய மரியாதை தந்து எண்ணங்களை விட்டுக் கொடுப்பவர் இளையவர்.

முளைக்கும் போதே முழு ஒளியோடு பிறக்கும் கிழக்கு வெள்ளிபோல்—

அரசியல் வாழ்வைத் தொடங்கியபோதே தனிப் புகழ் பெற்றவர் மூத்தவர்.

சமுத்திரத்தில் நிறைய நீர் இருந்தும், பனித்துளியைத் தேடிப் பிடிக்கும் சக்கரவாகப் பறவைபோல்—

தெளிந்த அறிவைத் தேடித் தேடிச் சேர்த்துக் கொண்டவர் இளையவர்.

சுயமரியாதை உணர்ச்சியை நாடறியச் செய்தவர் மூத்தவர்.

அந்த உணர்ச்சியைப் பெற்றெடுத்த குடும்பத்தில் பிறந்தவர் இளையவர்.

தோன்றும் அவையிலெல்லாம் சுடர்விட்டு நிற்பவர் மூத்தவர்.

ஆன்றவிந்தடங்கிய அவரது தன்மையை அடிவலுவோடு ஏற்றுக் கொண்டவர் இளையவர்.

அவர்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டு.

அது இதுதான்—

இருள் விலகுகிறது என்பார் அவர்.

ஒளி வருகிறது என்பார் இவர்.

அறிந்தவர் அறிவார் பொருள் ஒன்றுதான் என்பதை.

இந்தச் சமுதாயம் கொடுத்து வைத்தது.

அவர்கள் மீண்டும் இணைந்து விட்டார்கள்.

உண்ணாநோன்பை உண்மையில் ஏற்று உடல் மெலிந்த இளையவரை—

கண்ணுற்ற கண்ட வேளையிலேயே கண்ணீர் உகுத்தார் மூத்தவர்.

எண்ணம் அப்படி.

இதயம் அப்படி.

இடையிலே தடைகளில்லை மடை திறந்தது பாச உணர்ச்சி.

இளையவர் "வாழ்க!" என்று மூத்தவரே சொன்னார்.

மூத்தவர் "வாழ்க!" என்று நாடே உரைத்தது.

பழச்சாறு கொடுத்தார் அவர்;

பருகினார் இவர்.

இருவரும் இணைந்து ஒற்றுமைக் கனிச்சாற்றை ஊரெங்கும் ஓடவிட்டனர்.

பருகினார் தோழர்; நிமிர்ந்தார்; இணைந்தார்; மகிழ்ந்தார்.

ஒருகதை முடிந்தது;

கனவு கலைந்தது.

மறுகதை இனி வேண்டாம்.

★

"மன்னிப்புக் கேட்டீர்களாமே?" என்றார் ஒருவர்.

"ஆமாம்" என்றேன்.

"என்ன சிரித்துக்கொண்டே சொல்கிறீர்கள்" என்றார்.

"மகிழ்ச்சி அவ்வளவு" என்றேன்.

"அவமானமாய் இல்லையா" என்றார்.

"அப்படித்தான் இருக்கிறது" என்றேன்.

"பிறகு ஏன் கேட்டீர்கள்?" என்றார்.

"ஒரு சமுதாயத்தின் மானத்தைக் காக்க ஒரு மனிதன் அவமானப் பட்டால், அந்த அவமானமே உன்னதமான தியாகம் இல்லையா?" என்றேன்.

நண்பர் யோசித்தார்.

"உடனே உங்களால் பதில் சொல்ல முடியவில்லையல்லவா" என்றேன்.

"இல்லை" என்றார்.

"வெற்றி எனக்குத்தான்" என்றேன்.

"நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்?" என்று கேட்டார்.

"என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தால், ஒற்றுமை இவ்வளவு சீக்கிரம் வந்திருக்குமா?" என்றேன்.

நண்பர் யோசித்தார்.

"ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு அழுதீர்களாமே?" என்றார்.

"ஆமாம்" என்றேன்.

"என்ன இது பெண்பிள்ளைகள் மாதிரி" என்றார்.

"பெண்ணாகப் பிறந்திருந்தால் இந்தப் பிரிவே வந்திருக்காது. ஆணாகப் பிறந்ததனால் ஏற்பட்ட பிளவை, பெண்ணாக மாறித் தீர்த்துக் கொண்டோம்" என்றேன்.

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழில் வான நூல் தடங்கள்

உலகின் பழம் பெரும் கலைகளில் ஒன்று 'வான நூல்' (Astronomy) என்பது

'மருத்துவக் கலை' கற்காலம் (Stone (Age) தொட்டே முளைத்து படிப்படியாக வளர்ந்திருக்க வேண்டும். அடுத்தபடியாக வானநூல்தான் தோன்றி வளர்ந்திருக்கும்.

காட்டுமிராண்டியாக இருந்த மனிதன், முதலில், உடலில் ஏற்படும் நோய்களைப்பற்றித்தான் சிந்தித்திருப்பான். அந்தச் சிந்தனை வழியிலே முதன் முதலில் அவன் கண்டுபிடித்த மருந்துகள் மேற்பூச்சு மருந்துகளாகத்தான் இருக்க முடியும். தொடர்ந்து அறிவு வளர வளர உட்கொள்ளும் மருந்துகளையும் தெரிந்திருப்பான். அதிலிருந்தே மருத்துவக் கலை வளர்ச்சிபெறத் தொடங்கி இருக்க வேண்டும்.

மருத்துவக் கலையையொட்டியே, வான நூல் உணர்வும் தோன்றி இருக்க வேண்டும்.

காடுகளில் வேட்டையாடி வயிறு வளர்த்த பழங்கால மனிதனுக்குப் பருவ மாறுதல்களால் ஏற்படும் வெயில் மழை, பனி, காற்று இவற்றின் தொல்லைகள் வானத்தைப்பற்றிய சிந்தனையை உண்டாக்கி இருக்கும். வளர்பிறை தேய்பிறைக் காலத்தை, அவன் சிந்திக்காமல் இருக்கமுடியாது. இந்தச் சிந்தனைகளே வான நூல் (Astronomy) தோற்றத்தின் ஆதிக்கருவாக இருக்கமுடியும்.

ஆனால், இந்தக் 'கரு' நீண்ட நெடுங்காலம் கருப்பத்திலேயே இருந்திருக்கும். உருவாகிப் பிறப்பதற்கு கணிதத்தின் துணையில்லாமல் முடியாது. கணிதம் மொழியின் வளர்ச்சிக்குப் பிந்திய நிலைமையில் இருப்பதால், வான நூலின் தோற்றம், கணித வளர்ச்சிக்குப் பிந்தியதாகவே இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் பார்த்தால் மொழிகள் 'வரிவடிவம்' பெற்ற பின்னரே கணிதம் உருவாகி இருக்கலாம். "எண்ணும் எழுத்தும் கண்களுக்குச் சமம்" என்பது, வள்ளுவரும் ஔவையும் வற்புறுத்தியதென்றாலும், இந்தக் கருத்து அவர்களுக்குச் சொந்தமாகாது. அவர்களுக்கெல்லாம் முந்தி. மிகப் பழங்காலத்திலேயே இந்தக் கருத்து நடைமுறையில் இருந்ததென்றே கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டாரின் நாகரிக வாழ்வுக்கு அடிப்படையாக இருப்பது கல்வி. அந்தக் கல்வி 'எண்' என்றும் 'எழுத்து' என்றும். இரு கூறாக இருப்பது இயற்கை.

கல்விக்கு அடிப்படையாக இருப்பது மொழி. உலகத்தில் ஆயிரக் கணக்கான மொழிகள் இருக்கின்றன. ஆனால், அவையனைத்தும் கல்வியாக வளர்ச்சி பெறுவதில்லை—இலக்கியங்களையும் கலைகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதில்லை.

காரணம்; அந்த மொழிகளுக்குரிய மக்கள் நிலையான நாகரிக வாழ்வு பெற்றிராததே சில மொழிகள் வளர்ச்சி பெற்று. கலைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கலாம். ஆனால், அந்தக்கலைகள் அந்த மொழிக்கு 'இரவல்' சரக்காகவே இருக்கும். அப்படி இருப்பதற்குக் காரணம்; அத்தகைய மொழிக்குரிய மக்கள். தொன்மையான நாகரிகம் பெற்றவர்களாயில்லாமல், பிற்காலத்தில் நாகரிகம் பெற்று, பிற மொழிக்கலைகளைத் தன்வயப்படுத்திக் கொண்டிருப்பதே.

உலகத்தின் பழம் பெரும் மொழியாகவும், நிலையான நாகரிக வாழ்வு வாழ்ந்த மக்களின் மொழியாகவும், இன்றுவரை இறவாத இளமை மொழியாகவும். இருப்பது தமிழ்மொழி என்று, நல்லறிவாளர் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழுக்கே உரித்தானதும், வேறெந்த மொழியிலும் இரவல் வாங்கிப் பயன்படுத்தக்கூட முடியாததுமான 'கீழ்முந்திரி—மேல்முந்திரி' இலக்கங்கள், தமிழின் பழமையான கணித நூல்திறமையின் கலங்கரை விளக்கங்களாக இன்றும் இருக்கின்றன.

இத்தகைய தமிழ் மொழியில், வான நூல் இல்லாமல் இருந்திருக்க முடியுமா ?

தமிழர்கள் தொல் பழங்காலக் கடலோடிகள் என்பது, எல்லாரும் ஒப்புக் கொண்ட உண்மை. வானநூல் அறிவில்லாதவர்கள் கடலோடிகளாக இருக்க முடியுமா ?

இன்று, தமிழில் வழங்கி வரும் வானநூல் தொடர்பான சொற்களும், வான நூலும், சமஸ்கிருத மயமாக இருப்பதைக் காண்கிறோம். இந்தச் சொற்களை ஆதாரமாக வைத்தே அறிவாளரும் கூட தமிழனுக்கு வானநூல் 'இரவல்சரக்கு என்று சொல்வதையும் காண்கிறோம். இப்படிச் சொல்பவர்கள் எவ்வளவு அறியாமை கொண்டவர்களாய் இருக்க வேண்டும் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

சமஸ்கிருத மொழிக்குரிய ஆரிய மக்கள் இந்தியாவில் நுழைந்தபோது நாகரிகம் இல்லாத மக்களாகவே நுழைந்தனர்.

அப்படி அநாகரிகர்களாக நுழைந்த ஆரியர்கள் ஏதோ ஒரு மொழியைப் பேச்சுவழக்கில் வரிவடிவம் பெறாத நிலையில் வைத்திருந்தனர் என்பது மறுக்க முடியாத ஒன்று.

அந்த அநாகரிகர்கள் இந்தியாவில் நிலைத்து நாகரிகம் பெற்ற பிறகும், கடல் கடந்து போவதை விரும்பவில்லை. மாறாக கடல்தாண்டிப் போய் வருவோரை இழிமக்கள் என்றும் கருதினர். இன்றும் ஆரிய வேதசாத்திரங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் கடல்தாண்டிப் போவதை, ஒரு பாவகாரியமாகவே கருதுவதும், அதற்கெனப் 'பிராயச்சித்தங்கள்' செய்வதும், எள்ளிநகையாடத்தக்க அளவில் இருந்து வருகின்றன.

ஆரியர்களின் முழுமுதல் வேத ஏடான 'ரிக்' வேதத்தில் வானநூல்களைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் இல்லை என்று, மாபெரும் சோதிடப் பண்டிதரும், தமிழ் ஆரிய மொழிகளில் வல்லவரும், 'சோதிடகலாநிதி' என்ற மாதப்பத்திரிகை ஆசிரியருமான 'வேல்நாயகர்' என்பார் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

இவற்றிலிருந்து ஆரியர்களுக்கு வானநூல் இரவல் சரக்குதான் என்பதை ஒருவாறு உணரலாம்.

அடுத்தபடியாக ஆரியர்களுக்கு இந்த வானநூல்இரவல் எங்கிருந்து கிடைத்தது என்பதே கேள்வி.

கிரேக்கர்கள் மூலம் வானநூல் கிடைத்தது என்று சிலரும், சுமேரியர் மூலம் கிடைத்தது என்று சிலரும் தோன்றியபடி கூறிவருகிறார்கள்.

இதில், கிரேக்கர்கள் மூலம் வானநூல் வந்தது என்போர் ; கிரேக்கர்களும் ஆரியர்கள் தான் என்பதையும் ; இந்திய ஆரியர்களுக்கு இல்லாத அறிவும் ஆற்றலும் கிரேக்கர்களுக்கு மட்டும் எவ்வாறு கிடைத்தது என்பதையும் ; சிந்திக்க மறுத்து விடுகிறார்கள்.

சுமேரியர் மூலம் வந்தது என்போர், உத்தேசமாகச் சொல்கிறார்களே தவிர போதுமான ஆதாரங் காட்டிச் சொல்லவில்லை. சுமேரியர்கள் திராவிட நாகரிகத்துக்குச் சமமான—அல்லது சற்று பிந்திய நாகரிகம் பெற்றவர்களாயிருந்து, பெருமளவு தடம் மறைந்து போனவர்களே.

உண்மை இவ்வாறிருக்க அந்த சுமேரிய நாகரிகத் தோற்றத்திற்கே மூலமாக இருக்கலாம் என்று கருதத் தக்க அளவு. பழமை வாய்ந்த தமிழ்—திராவிட நாகரிக மக்களை மறைத்து விடுகிறார்கள்.

இப்படி வேண்டுமென்றே மறைப்பதற்குக் காரணம் ; தமிழருக்கு—திராவிடருக்கு இத்தகைய பழம் பெருமை இருப்பதா ?" என்கிற அற்பக் குணமே தவிர வேறில்லை.

தமிழனின் பழம் பெருமைக் கருவூலமான தொல்காப்பியம், தமிழின் திருந்திய திறத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஒரு மொழியின் திருந்திய திறம் எத்தனை நாகரிக வாழ்வுக்குப்பின் ஏற்படுவது என்பதை சிறிதளவே ஆழ்ந்து ஆராய்ந்தாலும் தெளிவாகத் தெரியும்! தொல்காப்பியத் தோற்றத்திற்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழர்கள் ஓர் சிறந்த நாகரிக வாழ்வு பெற்றிருந்தனர் என்பதும். அந்த வாழ்வு ஒடியாமல் சிதையாமல் தொடர்ந்து வந்திருக்கிறது என்பதும் தெளிவாகும்.

தமிழர்கள் தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்னரே கடல் வாணிகத்தில் சிறந்திருந்தார்கள் இதனை :

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை' என்னும் (தொல்-அகத்-37) சூத்திரத்தால் அறியலாம்.

அத்தகைய பழைய கடலோடிகள் வானநூல் அறிவு இல்லாமல் இருக்க முடியுமா? கிரகங்கள் 7 தான் தொன்மையானவை. தமிழில் தோன்றியன என்பதும் 9 கிரகங்கள் பிற்காலத்தில் ஆரியர்களின் ஒட்டுவேலை என்பதும் வான நூலில் மேற்போக்கான ஆராய்ச்சியுள்ளவரும் கண்டறியலாம்.

இதனைக் கல்யாணவர்மன் எழுதிய சாராவளி என்னும் சமஸ்கிருத நூல் தெளிவுபடுத்தும். அதில் 'ராகு, கேது' என்னும் கற்பனைக் கிரகங்களைப் பற்றிய குறிப்பே இல்லை.

உண்மையில் கிரகங்கள் 9 ஆக இருந்து. சமஸ்கிருதமே வானநூலின் பிறப்பிடமாகவும் இருந்திருந்தால் வாரம் 7 நாட்களாக இருக்க நியாயமில்லை. 9 நாட்களாக இருந்திருக்க வேண்டும்.

ஆரிய மொழியிலிருந்து தமிழ் இரவல் பெற்று வான நூல் வழங்கி இருக்குமேயானால் தமிழ் மொழியில் 7 கிரகங்களின் பெயர்களும் இருந்திருக்காது. சூரியன் சந்திரன் குரு சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களுக்கு மட்டுமே பெயர் இருந்திருக்க வேண்டும். காரணம்: இந்த நான்கு கிரகங்கள்தான் எவரும் எளிதாகக் கண்டுபிடிக்கக்கூடிய கிரகங்களாகும். ஆனால், தமிழில் 7 கோள்களின் பெயர்களும் 12 இராசிகளின் பெயர்களும் 27 நட்சத்திரங்களின் பெயர்களும் இருப்பானேன் ?

தமிழ் கோள்	ஆரிய கிரகம்
ஞாயிறு	சூரியன்
திங்கள்	சந்திரன்
செவ்வாய்	அங்காரகன்
புதன்	புந்தி
வியாழம்	குரு
வெள்ளி	சுக்கிரன்
சனி	மந்தன்

(11-ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழில்

பொதுக் கூட்டங்களில் எனக்கு செருப்பு வழங்குமாறு கோரியிருந்தேன். அண்ணாவின் அன்புக்கட்டளைக்கிணங்க அக்கோரிக்கையைக் கைவிட வேண்டியவனாகிறேன், என்பதைத் தோழர்களுக்குப் பணிவன்புடன் அறிவிக்கிறேன்.

அன்பன்

கண்ணதாசன்

தென்றல் அடுத்த இதழிலிருந்து

"அருப்பை கிழார்" எழுதும்

"கில்லாடி முத்தன் M. L. A" என்னும் சிந்தனைக் கதவைத் திறந்துவிடும் குறுநாவல் ஆரம்பமாகிறது.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 4-3-'61 | இதழ் 37

வரி போடுங்கள்!

வடவர் ஏகாதிபத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் 1961-62-ம் ஆண்டுக்குரியது வெளியாகிவிட்டது.

வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியின் முடிவில் சுமார் 400 கோடியாக இருந்த அரசாங்க வரவு, ஆண்டு தோறும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி சுமார் 963 கோடியாக உயர்ந்து, இன்னும் போதாமல் 1024 கோடியாக உயர்த்தப்படுகிறது. வடவராட்சியின் அடங்காத வரிப் பசியின் விளைவு இது.

இந்த வருமானம் முழுவதும் வரியின் மூலமாக உயர்த்தப்பட்டதே தவிர வேறில்லை. வரி உயர்ந்தால் விலைவாசி உயரும் என்பது ஆட்சியாளர் சிந்தனைக்கு எட்டாத அதிசயங்களில் ஒன்று.

கடந்த 1948-ம் ஆண்டில் செலுத்திய வரியைவிட 3 மடங்கு வரியைச் செலுத்தப் போகிருர்கள் பொதுமக்கள்.

வெள்ளையன் ஆட்சியில் இருந்த இராணுவச் செலவு வெறும் 60 கோடி. 1961-62-ம் ஆண்டின் இராணுவச் செலவு $288\frac{1}{2}$ கோடி!—ஏறக்குறைய 5 மடங்கு அதிகம். வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்த பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் சேர்த்துச் செய்த இராணுவச் செலவே இந்த 60 கோடி என்பதை நாம் மறக்கமுடியாது. வீதாசாரப்படி பார்த்தால். வெள்ளையனைவிட 8 மடங்கு பணத்தை வடவர் ஆட்சி இராணுவத்திற்காகச் செலவிடுகிறது.

இந்த இராணுவம் இத்தனை பணத்தை விழுங்கிவிட்டு என்ன செய்கிறது? குடியரசு தினம், சுதந்திர தினம், வெளிநாட்டுத் தலைவர்கள் வருகை, முதலிய காலங்களில் அணிவகுத்து நின்று 'சல்யூட்' அடிக்கிறது-அவ்வளவுதான்!

இதற்காகப் பொதுமக்கள் தரும் பணத்தில் மூன்றில் ஒரு பாகத்தை விழுங்கிக்கொண்டிருக்கிறது இராணுவம்!

அண்டை நாடுகளின் ஆக்கிரமிப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்துவிட்டு, வாய்ப்பந்தல் நிழலில் வீற்றிருக்கும் வடநாட்டு முலவர்க்கு, இத்தனை இராணுவச் செலவு எதற்கென்றே நமக்குத் தெரியவில்லை.

உள்நாட்டுப் போர்களை எதிர்பார்த்து இராணுவத்தை-அதன் செலவை பெரிதாக்கிக்கொண்டிருக்கிருர்களோ? அப்படியும் சொல்லமுடியவில்லை! தற்கொலையால் செத்துத் தொலைந்தாலும் தொலைவார்கள்—சண்டையிட்டுச் சாகமாட்டார்களே!

இங்கே, எவரெவர் தலையில் மிதிப்பாரோ, அவரெல்லாம் தெய்வமாகப் போற்றப்படுவர்.

எவரெவர் வாழ வகையில்லாமல் செய்பவரோ அவரெல்லாம் நாட்டின் ஆட்சி பீடத்தை அலங்கரித்திருப்பர்.

இந்த அலங்கோல நிலைமைகளை உணரமுடியாமல், இராசி பலன் போட்டு, மக்களைப் பயித்தியங்களாக அடிக்கப் பத்திரிகைகள் இருக்கின்றன-சோதிடர்கள் இருக்கிருர்கள்.

ஆட்சியின் ஒழுங்கீனங்களால் வரும் அத்தனை கேடுகளையும் கிரகச் செயல் என்று, கிரகத்தின் மீது பழி போட்டுப் பொறுத்துக்கொண்டிருக்கும்படி, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பழக்கப்பட்டிருக்கிருர்கள் இந்நாட்டு மக்கள்!

ஆண்டவனுடைய அருள் நெறி என்னும் பேரால் குருட்டுக் கொள்கைகளைப் போதிக்க மடப்பண்டாரச் சந்நிதிகள் இருக்கிருர்கள் அவர்களது முட வேதாந்தங்களைப் பரப்பப் பெருமைப்படுத்த-எத்தனையோ ஏஜண்டுகள் இருக்கிருர்கள்-இந்த நாட்டில்! மக்களின் வாழ்க்கைத் துயரை மறக்கடிக்கும் வழிகள் இவை!

அரசியல் துறையில். கூலிக்காக நாட்டை அயலான் பிடியிலே சிக்க விட்டுவிட்டு, அதையே சுதந்திரம் விடுதலை, என்று கூறும் கிராதகத் துணிவுடையோர் வேறு எந்த நாட்டில் உள்ளனர்!

அரசியல் அறிவே கடுகளவும் இல்லாமல் சாதி, காசு, ஆகிய காரணங்களுக்காக வாக்களிக்கும் மதிமந்தர்களை எங்கே காணமுடியும்?

பிளாட்பாரங்களிலே எலி பெருச்சாளி செத்துக் கிடப்பதுபோல, அநாதைப் பிணங்கள் கிடக்க, அதன் அடுத்த தெருப் பிளாட்பாரத்தில்-பொதுக்கூட்டத்தில் நாடு பெரிதும் முன்னேறிவிட்டதென்று, நாக்கூசாமல் பேசும், அமைச்சர்கள் இருப்பது எந்த நாட்டில்?

13 ஆண்டு காலமாக வரிமேல் வரியாகச் செலுத்தியது தவிர, எந்த வாழ்வும் வளமும் காணுவிட்டாலும், தங்கள் வாழ்வைக் கெடுக்கும் ஆதிக்கக்காரர்களின் உருவப் படங்களைத் தவருமல் வீடுகளிலே தூக்கி வைத்து, மலர் மாலை சூட்டி மகிழும் மரத்தலையர்களை எந்த நாட்டில் காணமுடியும்?

ஆலைகளும், அணைக்கட்டுகளும், ஆராய்ச்சிக்கூடங்களும், அயல் நாட்டில் அமைத்து, அந்த அமைப்பின் வலிமையிலேயே தன்னுடைய வாழ்வையும், வளத்தையும், கொள்ளையடித்தாலும், வாய் திறவாமல்—மனங் கொதியாமல்—வணங்கிக் கிடக்கும் மனிதஉருவங்களை எங்கே காணலாம்?

தந்நாட்டு மக்கள் பேயர்களாய்ப் பிச்சைக்காரர்களாய் திரிய, அவர்களிடத்திலேயே பிறநாட்டில் வளர்ந்துள்ள பெருமைகளைப் பேசுவோரையும் அந்தக் காலட்சேபத்தைக் கேட்டுவிட்டுப் பொறுமையுடன் இருப்போரையும்-எங்கே பார்க்கலாம்? அவசியமில்லாத அலுவலக நேர மாற்றங்கள், அஷ்டாம்சத்தை தசாம்சமாக மாற்றி, முகத்தல், நிறுத்தல். முதலிய அளவுகளாலும், நாணயங்களாலும் குழப்பம் புரியும் 'துக்ளக்' முறைகள், எந்த நாட்டில் வளர முடியும்?

வேலையில்லாக் கொடுமையால் வீதிகளிலே திரிவோரிடம் 'கடுமையாக உழையுங்கள்! கடுமையாக உழையுங்கள்!' என்று கண்ணை மூடிக் கொண்டு பேசும் மேதாவிகள் (!) மலிந்தநாடு எது?

தாய்நாட்டின் பெயருக்கும் தாய்மொழியின் பெயருக்கும் போராடிக் கொண்டிருக்கும் சுதந்திரத் திருநாடு (!) எது?

பெற்ற தாயாரை "பேயாவடை" என்று மற்றவன் கூற, அதுபோலவே பத்துமாதம் வயிற்றிற்குடியிருந்து வந்தவனும் 'பேயாவடை' என்று கூப்பிடுவது எந்த நாட்டில்?

'பேயாவடை' என்று கூப்பிட உனக்கு வெட்கமில்லையா? 'அம்மா' என்று அழையேன் நாக்கு அழுகியா போய்விடும்? என்று கேட்பவனும்; "அல்ல அல்ல 'பேயாவடை' என்று அழைத்தால்தான் உலகறிந்து போற்றும்" என்கிற பித்தர்களும் "பேயாவடை" என்ருல் "இனி நான் சும்மாவிடமாட்டேன்" என்பவனிடம், "அப்படியா உனக்கு முன்ருல் மட்டும் "அம்மா" என்பேன், மற்ற எல்லாரிடமும் "பேயாவடை" என்றுதான் சொல்வேன்! ஏனென்ருல், அதுதான் பிரபலமான பெயர்' என்கிற பேயனும், 'சரி சரி என் முன்னிலைக்காவது 'அம்மா' என்று சொல்ல ஒப்புக் கொண்டாயே!—அதுவே போதும்" என்கிற அரைக்கிணறு தாண்டுவோரும் எந்த நாட்டில் இருக்கிருர்கள்?

நெசவாளர்கள் நலிகிருர்களா? சரி சரி அதற்காக ஆண்டுக்கொரு திருவிழா நடத்துங்கள். பெண்களுக்கு சீலை உடுத்தக் கற்றுக் கொடுக்கப்படும் என்று, விளம்பரம் செய்யுங்கள்.

மரங்கள் குறைந்து, மழை வறட்சியா? சரிசரி, அதற்கொரு திருவிழா கடுங்கோடையில்-ஆடிமாதத்தில் நடத்துங்கள்.

"ஐந்தாண்டுத் திட்டங்களில் நியாயமான பங்கு கிடைக்கவில்லை என்கிருர்களா?" சரி சரி முன்ருல் வெள்ளைக்காரன் கட்டின அணைகள் பழங்கால மன்னர்கள் கட்டிய கோவில்கள் ஆகிய எல்லாவற்றையும் படம் பிடித்து 5 ஆண்டுத் திட்டத் திருவிழாக் கூட்டம் ஏற்படுத்திப் படம் காட்டுங்கள்,

உணவு கேட்கிருர்களா? சரி சரி, பிள்ளைப் பெருதே என்று பிரசாரம் செய்யுங்கள்! மேலே கண்ட திருக்கூத்துக்கள் நடப்பது எந்த நாட்டில்?

படுமோசமான-குருட்டுத்தனமான ஒரு அந்நிய ஏகாதிபத்தியம் 14 ஆண்டுகாலமாக சுதந்திர ஆட்சி என்கிறபேரால் ஆட்சி புரிவது எந்த நாட்டில்?

திருடவந்தவனே வீட்டுக்காரனுக ஒப்புக் கொள்ளப்படுவது கதைகளில் கூட சாத்திய மாகாது. ஆனுல். இங்கே அந்நிய ஏகாதிபத்திய சுரண்டல் ஆட்சி, சுதந்திர ஆட்சி என்று அஞ்சாமல் கூறப்படுகிறது.

இந்த நாட்டில் எத்தனை வரிப் போட்டால் தான் என்ன? இங்குள்ள அத்தனை பேரும் ஓட்டாண்டிகளாகி ஒழிந்தால்தான் என்ன?

தேர்தலின் போது சில்லறைக்காசு 2 ருபாய் கொடுத்து விட்டால்போதும் காளை மாட்டுக்கே ஓட்டு! என்ன உருப்படும்?

நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

(புறம் 187)

ஏ, நிலமே! ஒன்று நாடாகுவை; ஒன்று காடாகுவை; ஒன்று அவலநிலை அடைவை; ஒன்று மேம்பாடுபெறுவை; உன்மேல் நடமாடும் ஆண்மக்கள் எந்த வகையில் சிறந்தவரோ அந்த வகையில் நீயும் சிறந்திருப்பாய்! வாழ்வாயாக"

நாட்டில் வாழ்பவர்கள் மூடர்களும், அயோக்கியர்களுமாக இருந்தால்? சூழ்ச்சியாக ஆதிக்கம் செலுத்துவோருக்கு நல்லதுதானே! அதுதான் வரி-வரி-வரி-வரிமேல் வரி!

கண்ணதாசன் அறிவிப்பு

அன்புடையீர்,

வரும் 11, 12 தேதிகளில் மதுரை மாவட்டத்தில் தோழர் எம். ஜி. ஆர். அவர்களோடு சுற்றுப்பயணம் செய்ய ஒப்புதல் அளித்திருந்தேன். அந்தத் தேதிகளில் ஏற்கனவே விளம்பரம் செய்திருந்த வேலூர் (சேலம்) தர்மபுரி, சேலம் தோழர்கள் தங்கள் நிகழ்ச்சிகளை மாற்ற முடியாதென அறிவித்திருப்பதால், மதுரைக் கூட்டங்களுக்கு வர இயலாதவனுக இருக்கிறேன். இதனை எம். ஜி. ஆர். அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளேன். நண்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்.

மற்ற நிகழ்ச்சிகள் விவரம் தனியாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள நாட்களைத் தவிர வேறு நாட்களில் யாரும் எங்கும் தயவு செய்து கூட்டங்கள் ஏற்பாடு செய்யவேண்டாம்.

அன்பன்,
கண்ணதாசன்.

மதுரை எழுத்தாளர் மன்ற மூன்றாவது ஆண்டுக் கவியரங்கம்

கவியரங்கத் தலைவர் **கண்ணதாசன்** முன்னுரை

பிள்ளை இவள்என்பார்; பெண்என்பார், நாள்நடக்க
துள்ளும் இளமைத் துடியிடையாள் பாருமென்பார்
வெள்ளம் புரள்காலம், வெயிற்காலம் மாறிவர
அள்ளுஞ் சுவைமொழியாள் அங்கம் தளர்ந்தவள்தோல்
எங்கும் திரையோட, இருவிழியும் மங்கிவர
மங்கை கிழவியெனும் மற்றோர் பெயர்படைத்து
ஓர்நாள் மடிவாள்; ஊரார் பிணமென்பார்
மாறிவரும் காலம் மனிதகுலம் அத்தனைக்கும்
மாற்றங்கள் காட்டிவிடும் மறைவிலே போய் நிற்கும்
வீட்டைக் கனல்கொள்ளும்; வெளிகளிலே வீடுவரும்
நாட்டைக் கடல்கொள்ளும்; நாடுபுதி தாய்த் தோன்றும்
ஆறுவறண்டுவிடும்; அடுத்தநாள் வெள்ளம் வரும்
மாறும் உலகம்; மாறிவரும் சமுதாயம்
மாறிவரும் அத்தனையும் மண்மூடிப் போனாலும்
மாறாமல் வாழ்ந்திருக்கும் மங்காத் தமிழ்த்தாயே!
நீவாழி உன்றன் நிலைவாழி நின்கவிதைத்
தேர்வாழி என்று சிறியேன் வணங்குகிறேன்.
"எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவெ"ன்றார் தம்வழியில்
செவ்வி யுரைசாமி, செந்தமிழர் தம்சாமி
அவ்வை துரைசாமி அடியேன் பலவணக்கம்
திருக்குறளை மேலேற்றிச் செல்லும் இடமெல்லாம்
திருக்குறளே தெய்வமெனத் தேர்ந்துவரும் வள்ளால்மெய்
விளக்க வரும்சாமீ! வெள்ளைச்சாமீ உனக்கும்
வணக்கமது வழங்குகிறேன்! வாயார வாழ்த்துரைப்பீர்
உள்ளந் தெளிவாக ஒவ்வொன்றும் அறிவாக
கள்ளங் கலவாத கருத்தெல்லாம் சொல்லாக
சொல்லும் தமிழ்த்தலைவா! தூயவனே! நல்லறிஞர்
அண்ணாவின் தம்பி! அன்புநிறை சம்பத்து!
முன்னால் உனக்கும் முழுவணக்கம் சொல்லுகிறேன்.
வாரீர் எழுத்தாளர் மன்றத்தீர்! வாழியநீர்!
தேருங் கவிதைச் சிறப்பெடுத்துப் போடவந்த
காதற் சிவனடியான், கவிப்பேகன் கவித்தங்கை
தாலாட்டும் தமிழண்ணல் தழைக்குங் கவியுள்ளம்
சீராட்ட வந்த தென்மதுரைத் திராவிடரே
கருத்துக்கள் மாறிடினும் காலம் பிரித்திடினும்
ஒருத்தி நமைப்பெற்றாள் எனும்உண்மை மறவாமல்
காலைவரும் செய்திக் கவலையிலே மூழ்காமல்
நாளைப் பொழுதெல்லாம் நமக்கே எனஎண்ணி
வாழ்வை இழந்துவிட்ட மாபாவித் திராவிடர்கள்
வாழ வழிவகுப்போம்! மடிவோம் அவர்க்காக.

கிழக்கு

கவிஞர். பேகன் பி.ஏ., பி.டி

தேனைநிகர் கவிபாடி தமிழ்வ ளர்த்துத்
திகழ்கவிஞ! அவைத்தலைவ கண்ண தாச!
மோனைமலி தமிழ்மொழியை உயிராய்ப் போற்றி
முத்தமிழை வளர்க்கின்ற மன்றத் தீரே!
மானமிகக் கொண்டெழுந்து தமிழைக் காக்க
வரிப்புலிபோல் அடலேறு கள்போல் இங்கே
சேனையெனத் திரண்டிருக்கும் தமிழ்த்தொண் டர்காள்!
தீரகுலத் தாயினமே வணக்கம் செய்தேன்!

சொன்னதிசை நான்கினிலே கிழக்கின் மேலே
தூயதமிழ்க் கவிசொல்வேன் கேட்பீர்! ஞாலம்
தன்னிலுள்ள மாந்தரெலாம் உயிர்கள் யாவும்
தவிக்குமன்றோ இருள்சூழும் இரவின் போதில்
என்னவலி கொண்டாரும் ஆவ லோடே
எதிர்பார்ப்பார் இருள்நீங்கக் கிழக்கே! ஆக
மன்னுதிசை யென்றதுவோ கிழக்கே யாகும்!
மற்றுமுள்ள திசைகளெலாம் அதனால் வந்த!

ஆதவன்றான் இல்லையெனில் உலகம் உண்டோ?
அங்கிருந்து வந்ததுதான் இந்த வண்டம்
சோதிமயக் கிரணத்தால் கல்லும் மண்ணும்
தூயபசும் பொன்னாக; தூசு வைரச்
சாதியதன் துகளாக! தண்ணீர் தங்கச்
சாந்தாக மாற்றுபவன் கதிர வன்றான்
பூதலத்தில் இளம்பரிதி பிறக்குந் திக்கு
புகழ்புரியும் கீழ்த்திசையே! வேறொன் றில்லை!

இவ்வுலகம் இரண்டுவகை கிழக்கும் மேற்கும்
எழில்சேர்க்கா அறியாமை இருள்தான் எங்கும்
கௌவிடவே ஞாலத்தில் ஞானத் தீயைக்
காட்டுத்தீ யாக்கியது கிழக்கே! மாந்தர்
செவ்வையுற மகாவீரர், புத்தர், காந்தி
சீனக்கன் பூசியசும் வந்து தித்த(து)
எவ்வுலகும் போற்றுகிற கிழக்கே யன்றோ?
இதனாலே கிழக்கைப்பின் பற்றிக் கொள்வீர்.

சொல்லிடத்தான் வேண்டுமெனில் இன்னும், மக்கள்
துயர்தீர்த்த ஏசுவொடு நபிபி றந்த
நல்லவிடம் எதுமையக் கிழக்கே யாகும்!
நற்கவிதை யாற்றலிலே மேன்மை கண்ட
வல்லதிருத் தாகூரும் கிழக்கில் வந்தார்!
வையத்தின் அறிவெல்லாம் வடித்தெ டுத்து
துல்லியமாய் விளங்குதிருக் குறளாய்த் தந்த
வள்ளுவனார் தோன்றியதும் கிழக்குத் திக்கே!

மேற்குதன்னைப் பாடுபவர் சொல்வார், இன்று
மேனாடு பண்பட்ட தென்றே, ஈதோ
தீர்க்கமுடன் கூறுகிறேன் கேட்பீர், மேற்குத்
திசைதன்னிற் பண்புபட்ட தையா! மேற்கில்
போர்க்கருவி வளர்ந்ததன்றி வளர்ந்த தென்ன?
பொருள்வளர்ந்த தென்பார்க்குத் திருக்கு றள்சொல்
மார்க்கத்தில் நின்றாற்றின் பண்டை நாட்போல்
வளர்ந்துவரும் பல்வளமும் என்றே சொல்வேன்!

தெற்குதன்னைக் குறைசொல்ல மனமோ இல்லை!
தென்பாண்டி மண்டலமும் கிழக்கு நாட்டுள்
தக்கதொரு நல்லிடத்தைப் பெற்ற டங்கும்!
சாற்றுதற்கு நாகூசும் வடக்கைப் பற்றி!
மிக்கவாடைக் காற்றுவரும் வடக்கி ருந்து
வெகுநோய்கள் வருவதெல்லாம் அக்காற் றாலே
பக்குவமாய் இதைச்சொன்னார் அறிஞர்! நோய்கள்
பனியாகும் கிழக்கிலெழும் பரிதி முன்னே!

வடக்குதனை வாழ்த்துவோருந் தெற்கு தன்னை
வாயாரப் புகழ்வாரும் மற்று முள்ள
குடத்திசையைப் பாடுநரும் நீங்கள் இங்கே
குணத்திசையில் இல்லையெனில் என்ன செய்வார்?
தடந்தோளர் வீற்றிருக்கும் கீழ்த்தி சையே
தமிழ்நாட்டைக் காத்திடவே வளர்க நாளும்!
திடங்கொண்டு முத்திசையும் ஒன்றாய்ச் சேர்ந்து
செழும்பரிதி வழியினிலே நின்று வாழ்வீர்.

பின்னுரை

உழக்கெடுத்துக் கிழக்களந்தார் கவிஞர் சொன்ன
உரைமடுத்து நிறையடைந்தீர் நீவீர்! வாழ்க்கை
விழக்கிடக்கும் தமிழினத்தை மேல் எடுக்க
வெங்கதிரோன் தோன்றுவது கிழக்கே யாகும்.
கிழக்குரைத்த நாகரிகம் உலகெல் லாமும்
கிளர்ந்தோடி வாழ்வதனை மறப்ப துண்டோ?
தழைக்கவரும் தமிழினமும் ஓர்நாள்! அன்று
தாரணியில் கீழ்த்திசையே மேலே நிற்கும்.

இராம. இராமநாதன்.

அடிவானத்தைக் கண்ட மனிதன் அதற்கப்பால் என்ன என்றறிய முயன்று, உலகம் உருண்டை என்ற முடிவைக் கண்டான். உருண்டையான உலகம் தொங்குகிறது; அது பல உலகங்களை அடுத்து இருக்கிறது என்பதையும் அறிய முற்பட்டான். அத்தகைய முயற்சியின் முடிவை அறிய இன்று துடிதுடிக்கிருன்.

வான வெளியில் கண் கண்டவை போக வேறு என்ன உள்ளது என்றறிய அறிவு துடித்தது. அதன் விளைவுதான் 'ஸ்புட்னிக்' என்றழைக்கப்படும் விஞ்ஞான முயற்சி! வான வெளிமூலம் கதரவனை அடையவும், சுக்கிரனை அடையவும் முயற்சிகள் நாள் தோறும் உருவாகி வருகின்றன. இதற்கான அடிப் படைக் கல்லை 1783-ல் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'மாண்ட்கோல் பியர்' என்ற சகோதரர்கள் 'பலூன்' மூலம் தொடங்கி வைத்தார்கள். 1903-ல் வான வெளியை நோக்கி 'ஆர்வில் ரைட்' என்பார் இயந்திரமே இயக்கும் வான வெளிக் கப்பலை வெற்றியோடு அனுப்பினுர். 1956-ல் அமெரிக்க நாடு இம்முயற்சிக்கு வலுவூட்டத் தொடங்கிற்று. கன்னி முயற்சியாக 'பெல்-எக்சு' 2 என்ற, மாதிரி விமானம் ஒன்றை வான வெளியில் 24 கற்களளவே அனுப்ப முடிந்தது. 1957-ல் அமெரிக்கா அனுப்பிய மனித பலூன் 19 கற்களே வானவெளிப் பயணம் சென்றது. இந்த முயற்சியில் இடைவிடாமல் சோவியத் விஞ்ஞானிகள் ஈடுபட்ட செய்தியை 1957-ம் ஆண்டு புலப்படுத்தியது. 'ஸ்புட்னிக் 1' என்ற வான்வெளிக் கப்பல்-வானத்தை ஊடுருவி 560 கற்கள் சென்றன: இரண்டாவது அனுப்பப் பெற்ற 'ஸ்புட்னிக்-2' 1,062 கற்கள் சென்றன. இந்த முயற்சியில் அமெரிக்கா 2,700 கற்கள்வரை 1957-ல் 'ராக்கெட்' மூலம் சென்றது. 1958-ல் வான்வெளிக் கப்பலை அமெரிக்கா 1.587 கற்கள் அளவே அனுப்ப முடிந்தது.

இவை, செய்திபோல் காணப்படும் மனித முயற்சிகள்! இயற்கையை அளவிட மனிதன் முயலும் மாபெரும் முயற்சி! வெற்றியா? தோல்வியா? என்பதில் கருத்தூன்ருமல் மனித குலம் தழைக்க மக்களிர் சிலர் பாடுபட்ட வரலாறு இது. இமயமலையையே சிவ பெருமான் இருப்பிடம்-ஒருவரும் அணுகவரிது என்று ஒதுங்கி வாழ்ந்து-அறிவை இழந்த நமக்கு அறிவியல் தருகின்ற புதிய செய்தி இதுதான். நீ வாழும் உலகைச் சுற்றிப் பல உலகங்கள் உண்டு; வான் வெளியில் பல்லாயிரம் கற்கள் இடை வெளியில் தொங்கும் அவைகளைக் காட்டுகிரேம் என்ற புதிய அறிவு மேல்நாட்டில் இருந்து வெளிக் கிளம்புகிறது.

அறிவியல் பயணத்தைத் தொடங்கும் நாம், உலகியலைப்பற்றி அறிந்து கொள்ளுதல் நலம். காற்று மட்டுமே சூழ்ந்திருக்கும் வெளி உலகத்தில் நாம் கண்டதெல்லாம் கதிரவனும், நிலவும், உடுக்களும் ஆகும். இவை தம்மை வழிபட்டு வாழ்ந்தவரும் உண்டு. ஆனால் இவை யாவை? இதற்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன? அறிய முயன்றிருக்கிருர்கள்-முடிவு தெரியாது போய்விட்டது. இடைக்காலம் தமிழுக்கும் அறிவுக்கும் இடையூறுக் காலம் ஆகும். மேல்நாட்டு விற்பன்னர்கள் முயன்று முயற்சியில் முடிவு கண்டனர்.

கோப்பர் நீக்கஸின் தத்துவத்தை மக்களினம் ஒப்புக்கொண்டது. "ஸோலார்" முறைப்படி வான்வெளி முழுதும், காற்ருல் அடைக்கப்பட்டது என்பதே. ஆனால் இடை இடையே தட்ப வெப்ப நிலை காரணமாக உடுக்கள், கதிரவன் போன்றவை காண முடியாது போயின. இதிலே கருத்துக் கொண்டோர் மலை உச்சிகளில் சென்று "டெலஸ்கோப்பு" போன்ற கருவிகளினுல் வான்வெளியையும் ஒளிக் கதிர்களையும் ஓரளவு கண்டார்கள். 1931-ல் ஆகஸ்ட் பிக்கார்ட் என்பவர் 52000 அடி பலூன் மூலம் வான்வெளியில் பறந்து உலகின் உருவத்தை, வளைவைக் கண்டறிந்தார். அவர் கண்டவை குறைவாக இருப்பினும் போதுமானவையாய் இருந்தன. அறிவியல் விற்பன்னர்களுக்கு இருந்த ஒரே ஆசை; காற்ருல் மூடப்பட்டு கண்ணுக்குத் தெரியாது விளங்கும் இரகசிய உலகங்களை (கோளங்களை) அறிய வேண்டும் என்பதே. மக்களினம் வியக்கத்தக்க வகையில் வான்வெளி பயணச் செய்தியை 1956-ல் விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர். நெடுங் காலமாக நினைத்த ஒன்றுதான், என்ருலும் எப்படிச் செய்வார்கள்? எப்படி முடியும்? என்றே மக்கள் எண்ணி வியந்தனர்.

வியப்பின் விடி வெள்ளியை, மனிதன் உருவாக்கிய நிலவை, உலகைச் சுற்றி வருமாறு 1957-ல் விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர். இதுவே மனிதன் வான்வெளிப் பயணத்தின் முதல் வெற்றி எனலாம்.

அடக்கம் இருப்பின் அறிவு உண்டு என்பது ஆன்ருேர் மொழி. விஞ்ஞான வளர்ச்சியை விளம்பரப்படுத்தாமல் வான்வெளி நோக்கி வெற்றிப் பயணம் செய்த நாடு சோவியத் நாடாகும். 1957-ல் இரண்டு வான்வெளிக் கப்பல்களை அனுப்பி வெற்றி கண்ட பெருமை இரஷ்யாவுக்கு உண்டு. இரண்டாவது கப்பல் 1062-கற்கள் வான்வெளியுட் சென்றது. சோவியத் நாட்டை பின்பற்றிய அமெரிக்கா அடுத்த ஆண்டே மேலும் 587 கற்கள் அதிகமாக வான்வெளியுட் சென்றது.

இவை எல்லாம் என்ன பயனைத் தரும்? மனித முயற்சியில் இதன் பங்கு என்ன?" "ஆத்மீக உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட அறிவியல் துறை வழங்கும் புதுமை என்ன என்பதைத் தான் இவ்வான்வெளிக் கப்பல்கள் உணர்த்த முயலுகின்றன. நாம் வாழும் உலகிற்கு மேலே நம் உலகத்தைவிட பெரிய உலகங்கள் பல உண்டு. அங்கே மக்கள் வசிக்கமுடியுமா? வாழ்வதற்மேற்ற வகை முறைகள் உளவா? மனித இனத்தின் தொடக்க கால உயிரினங்கள் வளர்ச்சி பெற்ருே, பெருமலோ காணமுடியுமா? அன்றி சோதிட விற்பன்னர் கூறுமாப்போல் சூரியன், சுக்கிரன், நெருப்புப் பிழம்புகள் தானு என்பதையெல்லாம் அறிவதற்கு இவ்வான்வெளிக் கப்பல்கள் தோன்ருத் துணையாகும்.

இவ்வான்வெளிக் கப்பலைப்பற்றிய விரிவான விளக்கமும், அமைப்பு முறைகளும் விஞ்ஞான வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். உலகின் மேற்பரப்பில் வாழும் நமக்கு ஒலிக் கூட்டால் அமையப்பெற்ற மொழியின் மூலம் உண்மைகளை உணர முடிகின்றது. அதேபோல் வான வெளியில் காணப்படுகின்ற தட்ப வெப்ப நிலைகள், ஒளிக்கதிர்கள்-இவற்ருல் ஏற்படும் நிலைகள் போன்றவற்றை "டிரான்ஸுமீட்டர்" என்ற கருவியைக் கொண்டு ஒலிகளை அறிந்து அதை மொழியாக்கித் தருபவர் விஞ்ஞானிகளாவர். வான்வெளிக் கப்பல் நான்கு வகையான பகுதிகளை உடையது. அதனுடைய முழு நீளம் (ஜுபீட்டர்-சி) 68 6 அடி. முதற் பகுதி அதனுடைய முழு முடியாகும். இரண்டாவது பகுதிவான் வெளிக்கப்பலைச் செலுத்தக் கூடிய ஆற்றலைத் தருகின்ற விசை (இராக்கெட்) ஆகும். மூன்ருவது பகுதியில் 3 அல்லது 4 இராக்கெட்டுகள் காணப்படுகின்றன. நான்காவதும் கடைசிப் பகுதியுமான இதில்தான் வான் வெளியில் ஆராய்ச்சிக் குரிய கருவிகள் அமைந்துள்ளது. நான்காவது பகுதியின் கீழ்ப்புறம் விசை அழுத்தத்தைத் தரும் 4 அடி இராக்கெட்டை உடையது. எஞ்சிய $2\frac{1}{2}$ அடிகளில்தான் உலகை வியக்கச் செய்யுமளவு அரிய கருவிகள் அடங்கியுள்ளன.

★

Statement about ownership and other Particulars about Newspaper

THENRAL WEEKLY

FORM IV

1. Place of publication ... 2/127, mount Road, Madras-6
2. Periodicity of Publication ... Weekly.
3. Printer's Name ... R. M. Krishnan.
   Nationality ... Dravidian
   Address ... 2/127, Mount Road, Madras-6.
4. Publisher's Name ... R. M. Krishnan.
   Nationality ... Dravidian
   Address ... 2/127, Mount Road, Madras-6.
5. Editor's Name ... Kannadhasan.
   Nationality ... Dravidian
   Address ... 2/127, Mount Road, Madras-6,
6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the total capital. R. M. Krishnan, L. Veerappan, 2/127, Mount Road, Madras6-.

I, RM. Krishnan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

13-2-61. **RM. KRISHNAN**
Signature of Publisher

சைக்கிளைச்சுவரோரத்தில் நிறுத்திவிட்டு, வாங்கிவந்த சாமான்களைக் கையிலெடுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான் முத்தழகு. சுட்டெரிக்கும் வெயிலில் வந்ததால் வியர்வை கொட்டிக்கொண்டிருந்தது. முகத்தில் வடிந்த வியர்வை கண்ணில் படிந்து எரிச்சலை உண்டாக்கியது. துண்டை எடுத்து உடம்பைத் துடைத்துக்கொண்டு அன்னபூரணி கொடுத்தநீர்மோரைக் குடித்தான். உள்ளே இருந்து தவழ்ந்து வந்த குழந்தை தன் பிஞ்சுக்கரங்களால் அவன் கால்களைப் பிடித்தது.

பால்குமடு விரிய, முளைத்திருத்த இரண்டு மூவாப் பற்கள் பளிச்சிட ஆதவனைக் கண்டவுடன் மலரும் தாமரையைப்போல தகப்பனைக் கண்ட ஆனந்தத்தில் அந்தக் குழந்தை சிரித்தது. அந்த மழலையின் சிரிப்பு அவனுக்கு எரிச்சலை மூட்டியது. கால்களை உதறியபடி முகத்தைத்திருப்பிக்கொண்டான;குழந்தை பொத்தென்று கீழே உட்கார்ந்தது. தந்தையைக் கண்ட ஆனந்தத்தில் மலர்ந்த அந்த இளம்மொட்டின் முகம், வெயிலின் கொடுமையால் கருகிவிட்ட மலரைப்போல் கூம்பிவிட்டது. பிஞ்சுமனம் என்ன நினைத்ததோ தெரியவில்லை; வண்டு விழிகளில் நீர் துளிர்த்தது. கட்டைவிரலை வாயில் வைத்துச் சுவைத்தபடி செயலற்றிருந்துவிட்டது.

'தகப்பனில்லாப்பிள்ளை தாய் மடியிலே, தாயில்லாத பிள்ளை நடுத்தெருவிலே' என்று தெரியாமலா சொல்லுகிருர்கள். அந்தப் பிஞ்சுக் குழந்தையைப் பெற்றெடுத்த தாய் உயிரோடிருந்தால் குழந்தையின் கதி இப்படியா இருக்கும்? அவள் தான், அவனைப் பெற்றெடுத்த அன்றே, அவன் பிறந்து விழுந்த மறு விஞடியே ஊரழுக, உறவழுக, அவள் மட்டும் சிரித்துக்கொண்டே போய்விட்டாளே! எனக்கொரு குழந்தை வேண்டும்; அதன் செம்பருத்திக் கால்கள் என் மார்பில் உதைக்க வேண்டும், அந்த இன்பத்தில் நான் வாரியணைத்து முத்தமிட வேண்டும் என்று ஆசைப்பட்டவர், பெருங்கனவு கண்டவள், அவனைப் பெற்றெடுத்துவிட்டுக் கனவுலகத்திற்கல்லவோ போய்விட்டாள்.

ஆசையும் பாசமும் இமைக்கும் நேரத்தில் மறைந்துபோகும் நீர்க் குமிழிகளா?

குழந்தை செயலற்றிருந்தது. சிந்திக்கமுடியாத வயது. நினைத்துப் பார்க்கமுடியாத பிஞ்சுப் பருவம். அதற்குமா இந்தத் தொல்லை? என்ன பாவம் செய்தது குழந்தை? பாவம் செய்யக்கூடிய பருவாம மழலைப்பருவம்?

இல்லை; இல்லவே இல்லை!

ஆனல் முத்தழகு நினைத்தான். 'சனியனே! நான் என்ன பாவம் செய்தேனே எனக்கு வந்து நீ பிறந்திருக்கிருய்! நீ எனக்குப் பாவச் சுமை! பிறந்த அன்றே உன்னைப் பெற்றவளை விழுங்கிவிட்டாயே! நீ இறந்து அவள் பிழைத்திருக்கக் கூடாதா?'

சோர்ந்துபோயிருந்த குழந்தையைப் பார்த்தான். கட்டைவிரலை வாயில் வைத்தபடி அது பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. அந்தத் தாமரை முகத்திலிருந்த வண்டு விழிகளில், முத்தழகிற்குத் தான் செய்த பாவங்களெல்லாம் தெரிவதைப்போலத் தோன்றியது. முகத்தைத் திருப்பிக்கொண்டான். பாசம் முளைவிட வேண்டிய மனதில், வெறுப்பு, காடாக மண்டிக் கிடந்தது. மறுபடியும் வெறுப்போடு குழந்தையைப் பார்த்தான். வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது; அதில் குழந்தை அமர்ந்திருந்தது.

"அக்கா, இந்தச் சனியன் ஏனிப்படி வெயில்ல உட்கார்ந்திருக்கு தூக்கி உள்ளே போடக்கா...!" அவன் இதயத்தில் படிந்திருந்த வெறுப்புணர்ச்சி வார்த்தைகளில் உறவாடியது

"ஏண்டா முத்தழகு இந்தப் பச்சப் பாலகனைக் கரித்துக் கொட்டுற... நல்லாத்தான் வா!-அவதலையெழுத்து கண்ண மூடிட்டா; அதுக்கு இந்தப் பசலை என்னடா பண்ணும்..."

சோர்ந்து போயிருந்த குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள் அன்னபூரணி. குழந்தைமேல் ஒருவித அனுதாப உணர்ச்சி அவள் மனதில் இழையோடியது. விழிக்குளத்தில் அரும்பி நின்ற நீர்த் திவலைகளைத் துடைத்துவிட்டுக் கீழே இறக்கிவிட்டாள். குழந்தை தவழ்ந்துசென்று ஒரு மூலையில் படுத்துக்கொண்டது. அவன் தவழ்ந்து செல்லுவதையும், மூலையில் சென்று முடங்கிப் படுப்பதையும் பார்த்துக்கொண்டிருந்த அன்னபூரணியின் இதயம் நொந்தது. அவளொரு பெண்ணல்லவா! பத்து மாதம் சுமந்து குழந்தைகளைப் பெற்றவளல்லவா! பெற்றவளுக்குத் தானே தெரியும் குழத்தைகளின் பெருமை. இளமையிலேயே இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து, ஒன்றின்பின் ஒன்ருக அந்த இரண்டையும், அதன் பிறகு கணவனையும் இழந்து, எல்லோரையும் தன் கண் முன்னே மண்ணுக்குள் புதைப்பதைக் கண்டு நெஞ்சு வெடிக்க வெடிக்க அழுது விரக்தியடைந்தவளுக்குத்தானே தெரியும் குழந்தைகளின் அருமையும் பெருமையும்! அவள் தம்பியின் குழந்தையைக் கண்ணின் கருமணிபோல் பாவித்தாள்.

பாவச் சுமை

இராம. கண்ணப்பன்

ஆனல் அவனே...?

"சனியன், கருமம், நான் செய்த பாவங்களெல்லாம் சுமையாகச் சேர்ந்து குழந்தை வடிவில் வந்து என் கழுத்தை அறுக்கிறது! என் வாழ்க்கையையே சோக மயமாகி விட்டது! சண்டாளி, என்னைத் தவிக்க விட்டு விட்டு, அவள் மட்டும் மஞ்சள் குங்குமத்தோடு ஆனந்தமாகப் போய்விட்டாள்!" – இப்படி எண்ணி வேதனைப்பட்டான்.

முத்தழகு எதற்காக ஆசைப்பட்டானே, அது; எதை நினைத்து விதவிதமான கனவுகள் கண்டானே அது; அது கிடைத்தபோது ஆசையே வேதனையாக மாறிவிட்டது. குழந்தை அவன் கண்களுக்குப் பாவச் சுமையாகத் தோன்றியது.

முத்தழகின் மனைவி கோகிலா மூன்று முறை கருவுற்ருள். ஆனல் அவள் செய்த பாவமோ என்னமோ எல்லாம் சிதைவிலே முடிந்தது. குழந்தை என்ருல் அவளுக்குக் கொள்ளை ஆசை. வீதியில் செல்லும் குழந்தைகளையெல்லாம் வாரிஎடுத்து முத்தமிடுவாள். "எனக்கென்று ஒரு குழந்தை பிறக்காதா? தாமரை முகத்தையும், தளிர்மேனியையும், தொட்டுத் தொட்டு மகிழ்ந்து என் தாய்மை உணர்ச்சியை வெளிப்படுத்தி இன்புற எனக்கொரு குழந்தை பிறக்காதா? பால்குமட்டில் குழிவிழ, முல்லை மலர்போல இதழ் விரித்துச் சிரிக்கும் பொக்கை வாய்ச் சிரிப்பைக் கண்டுகளிக்க எனக்கென்று ஒரு குழந்தை பிறக்காதா?" ஊர்க்குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்து, அவர்களைத் திருப்பி அனுப்பும்போதெல்லாம் கோகிலா இப்படி எண்ணி மனம் வருந்துவாள். முத்தழகும் கோகிலாவும் ஒரு குழந்தைக்காக ஏங்கித் தவித்தார்கள்.

கோகிலா மறுபடியும் கருவுற்ருள். முத்தழகு இந்தத் தடவையாவது உயிரோடு ஒரு குழந்தை பிறக்க வேண்டுமே எனக் கோகிலாவை மிகவும் எச்சரிக்கையோடு கவனித்து வந்தான்.

"குனிந்தால் குழந்தைக்கு நோகும்; நிமிர்ந்தால் குழந்தைக்கு மூச்சுத் திணறும்; அதனல் நீ குனியவும் வேண்டாம் நிமிரவும் வேண்டாம் பேசாமல் உட்கார்" அவளுக்குப் புத்திமதி சொல்வான்.

காலத் தென்றலில் ஒன்பது பூரணிமைகள் தவழ்ந்து சென்றன. கோகிலா பேறுக்காகப் பிறந்தகம் புறப்பட்டாள். அவள் போகும்போது முத்தழகு அழுதுவிட்டான். "கோகிலா, மூன்று முறை நம் எண்ணத்தில் மண்விழுந்தது; ஏமாற்றத்தையே கண்டோம். இந்த முறையாவது எனக்கு உயிருள்ள குழந்தையாகப் பெற்றுக் கொடு கோகிலா!" என்று குரல் தளதளக்கக் கண்களில் நீர் மல்கக் கூறினன்.

கோகிலா விம்மினள். "அத்தான், மறுபடியும் நம் வீட்டிற்குள் நான் நுழையும்போது கையில் குழந்தையோடுதான் நுழைவேன்! உங்களுக்கு உயிரோடு குழந்தை பெற்றுத் தருகிறேன் அத்தான்...!" இப்படிச் சொல்லிவிட்டு அவள் போய் விட்டாள்.

அவன் கேட்டபடி, அவள் சொன்னபடி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்து விட்டாள். கோகிலா குழந்தையோடுதான் வீட்டிற்குள் நுழைவேன் என்று சென்றவள்; இன்பக்கோட்டைகள் கட்டி அதில் தான் பெற்ற மழலையை உலவவிட வேண்டுமென மனக்கோட்டை கட்டியவள்; பூமணக்கும் மேனியைத் தொட்டு மகிழ்ந்து, பால் மணக்கும் உதடுகளில் முத்தமிட நினைத்தவள்; குழந்தை குழந்தை என்ற எண்ணத்தில் இருந்தவள், பெற்ற மழலை மண் மீது விழுந்த சிறிதுநேரத்திற்குள் குழந்தையின் முகத்தைக்கூடப் பாராமல் நினைவுலகத்தை மறந்து விட்டாள்.

முத்தழகு அழுதான். தன் அன்பு மனைவி கூறியதையெல்லாம் நினைத்து நினைத்து அழுதான். உயிருக்குயிராய், இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு கொண்டவள், ஒரு குழந்தையால் இந்தக் கருமத்தாலல்வா இறந்துவிட்டாளென்று நினைத்து நினைத்து அழுதான். மனம் விரக்தியடைந்தது. அன்றுமுதல் அவன் கண்களுக்குக் குழந்தை பாவச்சுமையாகவே தெரிந்தது.

குழந்தை அருகில் வந்தால் போதும். அவன் உடலெல்லாம் பற்றி எரியும்; கொல்லவரும் மிருகத்தைப் போலத் தோன்றும். குழந்தையை நினைத்தாலே எட்டிக்காயாகக் கசந்தது அவனுக்கு.

கோகிலா இறந்து எட்டு மாதங்களாயிற்று. அவன் இருதயம் கனியவில்லை. நாட்களின் ஓட்டத்தில் வெறுப்பு வேரோடிப் படர்ந்து வளர்ந்தது.

★

உணவருந்த அமர்ந்தான் முத்தழகு. அன்னபூரணி பறிமாறினுள். குழந்தை சோர்ந்து போய் மூலையில் படுத்துக்கிடந்தது. பசியால் அந்தப் பச்சை இரத்தத்தின் குடல் காய்ந்து ஒட்டிப்போயிருந்தது. அன்னபூரணிக்குக் குழந்தையைப் பார்த்தவுடன் அழுகை வந்துவிட்டது, 'அவள் மட்டும் உயிரோடிருந்திருந்தால்...? வடிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். காலை மடக்கி, உடலைக் குலுக்கிக் கட்டைவிரலைச் சுவைத்தபடி அந்தப் பாலகன் படுத்துக்கிடந்த நிலைபரிதாபமாக இருந்தது.

"தம்பி, குழந்தை பிறந்து எட்டு மாதமாச்சப்பா; ஒரு நல்ல நாளாகப் பார்த்துக் காதைக் குத்திட்டா...!"

"ஆமா. இந்தச் சனியனுக்கு அது ஒன்னுதான் குறைச்சல். பிறந்த அன்னிக்கே தாயை விழுங்கி விட்டிருக்கு; இன்னும் யாரை விழுங்கக் காத்துக்கிட்டிருக்கோ தெரியலை. கருமம்! நான் செஞ்ச பாவம் எனக்கே சுமையா வந்திருக்கு!" அன்னபூரணி பேசி முடிப்பதற்குள் முத்தழகு கடுமையாகப் பேசி முடித்தான். அன்னபூரணியால் பொறுக்க முடியவில்லை.

"ஏண்டா முத்தழகு உன் மனதில் இரக்கமிங்கிறதே கிடையாதா? நீ பேசுறது ஒரு பேச்சாடா? இப்படியெல்லாம் பேசி அந்தப் புள்ளையை சித்ரவதை செய்வதைவிட நஞ்சைப் போட்டுக் கொன்னுடுடா...! ஏன் அந்தக் குழந்தையை உயிரோட கொல்லுற...!"

"நான் ஏன் நஞ்சைப் போட்டுக் கொல்லனும்...? இருக்கற பாவம் போதாதின்னு அதைவேற சுமக்கச் சொல்லுறியா...? கழுதை தன்னலே சாகட்டும்...!"

அக்காளும் தம்பியும் இரைந்து பேசிய சத்தத்தில் குழந்தை விழித்துக்கொண்டு விட்டது. அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தது. ஒட்டி உலர்ந்துபோன வயிற்றைப் பசி அரித்தது. குழந்தை தவழ்ந்து வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த முத்தழகின் தட்டில் கையை வைத்தது. முத்தழகிற்குக் கோபம் வந்துவிட்டது. முரட்டுத்தனமாகக் கையை அகற்றி முதுகில் பளீரென அடித்தான். குழந்தை வீரிட்டலறி அன்னபூரணியின் காலைக் கட்டிக் கொண்டது. முத்தழகு எழுந்து வெளியே போய்விட்டான். குழந்தையின் முதுகில் முத்தழகின் ஐந்து விரல்களும் அப்படியேபதிந்திருந்தன. அன்னபூரணி செயலிழந்து அமர்ந்து விட்டாள். முத்தழகு மனிதனு மிருகமா என்பதே அவளுக்குப் புரியவில்லை. குழந்தை அழுதபடியே தூங்கிவிட்டது.

பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. மன உளைச்சலோடு சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டான் முத்தழகு. அவன் மனதில் படர்ந்திருந்த விரக்தி முகத்தில் பிரதிபலித்தது. நடைபாதையில் போவோரும் வருவோருமாக நிறைந்து காணப்பட்டனர். முத்தழகு எதையுமே கவனிக்கவில்லை. சைக்கிள் வேகமாக ஓடிக்கொண்டிருநதது. திடீரென ரோட்டின் குறுக்கே ஒரு சிறு குழந்தை ஓடி வந்தது. தன்னை மறந்து சைக்கிளை வேகமாக மிதித்துக்கொண்டிருந்த முத்தழகின் சைக்கிளில் எதிர்பாராத விதமாக விழுந்துவிட்டது குழந்தை. முத்தழகு பதறிப் போய் சைக்கிளை நிறுத்திவிட்டு ஓடி வந்தான். குழந்தைக்கு நல்லஅடி, 'என்செல்வமே!' என அலறிக் கொண்டுவந்த அந்தக் குழந்தையின் தாய், கீழே கிடந்த குழந்தையைவாரிஎடுத்துஅணைத்துக் கொண்டாள். குழந்தையின் தலையிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. இதைப் பார்த்துவிட்ட அந்தத் தாய் 'ஐயோ!' என்று அலறினுள். முத்தழகு என்ன செய்வதென்றே புரியாமல் செயலற்று நின்ருன். ஆங்காங்கே நின்றவர்கள் வேடிக்கை பார்க்கச் சுற்றிக் கூடி விட்டார்கள். அந்தப் பெண் குழந்

தையைத் தூக்கிக்கொண்டு எழுந்து நின்ருள். முத்தழகைச் சுட்டெரித்து விடுவதைப்போல் பார்த்தாள்.

"ஏனய்யா நீ மனுசன் தானு? புள்ளகிள்ள பெத்துருக்கியா இல்லையா? கொஞ்சம் தவறியிருந்தா புள்ள செத்துல்லய்யா போயிருக்கும்?" அவள் ஆத்திரமாகப் பேசினுள்.

முத்தழகு குழந்தையை உற்றுப பார்த்தான். எண்ணெயே காணுத பரட்டைத் தலையும், வாயில் வடிந்த ஊழை மூக்கும், எலும்பும் தோலுமாகக் காட்சியளித்த அந்தக் குழந்தை பார்க்கவே சகிக்காமலிருந்தது. தலைமட்டும் சற்றுப் பெரிதாக இல்லாவிட்டால் அந்த உருவத்தைக் குழந்தை என்றே சொல்ல முடியாது. அந்த லெட்சணமான குழந்தைக்கா அந்தப் பெண் இவ்வளவு ஆத்திரப்படுகிருள்? முத்தழகு முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

"என்னையா மொகத்தைச் சுளிக்கிறே...? போ போ! கடவுள் கொடுத்த கண்ணுநக்கு முழிச்சுப் பார்த்து ஓட்டு போ! அவள் ஆத்திரமாகவும் கேலியாகவும் சொல்லிவிட்டுக் குழந்தையை அணைத்தபடி சென்று விட்டாள்.

முத்தழகு திகைத்து நின்று விட்டான். "நீ புள்ளகிள்ள பெத்துருக்கியா?" அந்தப் பெண் ஆத்திரமாகக் கூறியவார்த்தைகள் அவன் ாதில் நாராசமாக ஒலித்துக் கொண்டே இருந்தது. மத்தியானம் செல்வம் தவழ்ந்து தட்டில் சோற்றை அள்ளிய காட்சியும், முதுகில் மிருகத்தனமாக அடித்தபோது வீறிட்டலறிய காட்சியும் அவன் நினைவில் தோன்றியது. அவனையறியாமல் அடிவயிற்றிலிருந்து வெளி வந்த வார்த்தையை "செல்வம்!" என முணுமுணுத்தது உதடுகள்.

முத்தழகு சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். வழியில், அந்த ஊழை மூக்குக் குழந்தைக்குப் பால்கொடுத்தபடியே நடந்துகொண்டிருந்தாள் அந்தப் பெண். முத்தழகு சற்று முன்னுல் சென்று திரும்பிப் பார்த்தான். அவன் மனதில் படிந்திருந்த வெறுப்பு கண்ணீராக மாறிக்கொண்டிருந்தது.

"சே! ஒன்றுமறியாத அந்தப் பச்சைப் பசும் மழலையிடம் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொண்டு விட்டேன்...! கோகிலா தலை விதி அவ்வளவுதான்; அவள் இறந்து விட்டாள். பார்க்கக் கொடுத்து வைக்காதவள்! அதற்கு அந்தக் குழந்தை என்ன செய்யும்...? செல்வம் சிரித்துச் சிரித்து வந்தபோதெல்லாம், நான் வெறுத்து வெறுத்து ஒதுக்கினேனே! அந்தப் பிஞ்சுக்குழந்தையின் உள்ளம் எப்படி வெம்பிச் சோர்ந்திருக்கும்...? நானெரு முட்டாள்! முட்டாள்! இதயமே இல்லாத மிருகம்! தாவி வந்த குழந்தையின் கன்னத்தைக் கடித்ததைப்போல், செல்வன் என்னிடம் ஓடி வந்த போதெல்லாம் நான் ஒதுங்கி ஒதுங்கிப் போனேனே...! நான் மனிதன் தானு? எனக்கு இதய மிருக்கிறதா? இல்லை; இல்லவே இல்லை! மிருகம் நான்; கண்ணிருந்தும் பார்க்காத குருடன் நான்...!"

முத்தழகு தன்னைத் தானே நொந்துகொண்டான். அவன் எண்ணத்தில் செல்வத்தின் நினைவே நிறைந்திருந்தது; வீடு வந்துவிட்டது. சைக்கிளை விட்டிறங்கி வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான். அன்னபூரணி எங்கோ வெளியே போய் விட்டாள். செல்வம் ஒரு மூலையில் நீட்டி நிமிர்ந்தபடி படுத்துக் கிடந்தான். அவன் முகம் அழகாக அமைதியாகக் காட்சியளித்தது என்றும் வெறுப்போடு பார்த்த முத்தழகு இன்று விருப்போடு பார்த்தான். கண்களில் கண்ணீர் திரையிட்டது. மெல்ல நடந்து குழந்தையின் அருகில் சென்றமர்ந்தான். குனிந்தபடி குழந்தையின் முகத்தை உற்று நோக்கினுன். கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் செல்வத்தின் பட்டுடலில் விழுந்து சிதறியது. முத்தழகின் மனதில் ஆசையும் அன்பும் பொங்கிக்கொண்டிருந்தன.

"செல்வம், நீ எவ்வளவு அழகுடா என் ராசா!"

முத்தழகு செல்வத்தின் பூவிதழ்களில் முத்தமிட்டான். அந்த மலரிதழ் மரமரத்துப் போயிருந்தது. முத்தழகு திடுக்கிட்டான். குழந்தையின் பட்டுடலைத் தொட்டுப் பார்த்தான். பனிக்கட்டியில் வைத்தெடுத்த மீனைப்போல் உடம்பு விறைத்துக் குளிர்ந்து போயிருந்தது.

"ஐயோ, என் செல்வமே!" என்று தொண்டை கிழிய அலறினுன் முத்தழகு. அந்த அலறல் எதிரொலித்தது. ஆனுல் ஏனென்று கேட்கக் குழந்தை உயிரோடில்லை. ஆம்; அவன் வெறுத்த பாவச் சுமை அவனை விட்டே போய்விட்டது. முத்தழகின் அலறல் ஓயவில்லை.

வெளியே ஒரு சிறுவன் எதையோ தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருந்தான். ★

மதுரை எழுத்தாளர் மன்ற

மூன்ருவது ஆண்டு விழா

மதுரை எழுத்தாளர் மன்றத்தின் மூன்ருவது ஆண்டு விழா, 29-1-61 ஞாயிறன்று, மதுரை சந்திரா திரைப்பட அரங்கில் மன்றத்தலைவர் ஔவை. சு. துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்திருந்த பெரியோர்களையும், பொதுமக்களையும் செயலாளர் கூடலரசன் வரவேற்ருர். விழாவினைத் துவக்கி வைத்துப் பேசிய விருதை வள்ளல் திருக்குறள் ச. வெள்ளைச்சாமி அவர்கள், திருக்குறள் காட்டும் அறவழிக் கருத்துக்களையெல்லாம் எழுத்தாளர்கள் தங்கள் தங்கள் எழுத்துக்களில் இணைத்துப் பரப்பும் நற்பணியை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர் ஔவை-துரைசாமியவர்கள் மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சேவைகளைப் பாராட்டி, தற்காலத் தமிழ் இலக்கியத்தில் எழுத்தாளர்கள் செய்துவரும் தவறுகளையெல்லாம் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டி, வருங்காலத் தமிழகத்தின் பெருமைக்காகவும், சிறப்புக்காகவும் எழுத்தாளர்கள் இலட்சியப் பணியாற்ற வேண்டுமென வேண்டுதல் விடுத்தார்.

பின்னர் மன்றச் செயலாளர், தனது அறிக்கையில் கடந்த ஓராண்டுகாலச் செயல்முறைகளையும் சிறப்பு நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் கூறி, மன்றத்தின் பெருமைக்குத் துணையாயிருக்கும்படி எழுத்தாள நண்பர்களைக் கேட்டுக்கொண்டார். மன்றத்தின் துணைத்தலைவர் திருமதி. தே. தியாகராசன் அவர்கள், ஆண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளையும் பாராட்டிதழ்களையும் வழங்கி வாழ்த்தினுர்.

தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள், எழுத்தாளர்கள் உரிமைகளுக்கான சட்டங்களைத் தேடிப் பெறவேண்டுமென்றும், எழுத்துத் திருடர்கள் எச்சரிக்கப்பட வேண்டியவர்களென்றும் தனது சிறப்புச் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

பின்னர், விழாவின் சிறப்பு நிகழ்ச்சியான கவியரங்கம், கண்ணதாசன் தலைமையில் நடந்தது. கவியரங்க முடிவுரையில் தமிழ் இலக்கியங்களில் உள்ள கவிதைகளில் அமைந்துள்ள நயத்தைச் சான்றுகளுடன் எடுத்துக் கூறினுர். கவிஞனது எண்ணமும் சிந்தனையும் மலரும்போது தத்துவங்கள் மலருகின்றன என்ருர். "இன்னின்னவை நடைபெறக் கூடாதென்றுதான் எதிர்பார்க்கிருேம். ஆனுல் இன்னின்னவை நடந்துதான் ஆக வேண்டும் என்ருல் அது நடந்தே தீரும்" என்று குறிப்பிட்டார்.

விழா இனிது முடிந்தது.

கடல் உலகம்

பண்ணன்

2

மனிதன், நீருக்குள் மூழ்கும் ஆடையை அணிந்து சுமார் 500 அடி தான் நுழையமுடியும். 1934-ல் வில்லியம் பீப் (William Beebe) என்பவரும் ஓடிஸ் பார்டன் (Otis Barton) என்பவரும், பகலவனின் ஒளி பாயும் ஆழத்தையும் கடந்து பெர்முடா (Bermuda)க் கடலில் 5028 அடிவரை சென்று கண்டறிந்துள்ளனர். 1949-ல் பார்டன்மட்டும் 'பென்தாஸ் கோப்' எனும் எஃகு வேலைத் தாங்கி பெரும் ஆழமான 4500 அடிவரை மூழ்கி வந்திருக்கிருர்.

நீர் மட்டத்திற்கு அடியில், ஒளி நீரின் அசைவால் நெளிந்தோடிய வண்ணமே இருக்கும்.

கடல் உலகத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நம்முடைய கண்ணுக்குத் தெரியும் அலை வீசும் மேற்பரப்பு. அடுத்து அமைந்திருப்பது பரிதியின் ஒளி ஊடுருவிச் சென்று நின்றுவிடும் பகுதிக்கும், கடலடி நிலப் பரப்புக்கும் இடையிலுள்ள பகுதி. மூன்ருவது கடலடி நிலமட்டம்,

அலைதவழ்ந்து பாய்ந்து விளையாடி நிற்கும் விரிந்த மேற் பகுதியிலிருந்து மனிதன், நீரினுள் செல்லும் உடையை அணிந்துகொண்டு சாதாரணமாக 500 அடிகள்வரை கீழே செல்லலாம். ஆனல் திரு. வில்லியம் பீப் (William Beeb) என்பாரும் ஓடிஸ் பார்டன் (Oties Barton) என்பவரும் பகலவனின் ஒளி பாயும் ஆழத்தைக் கடந்து 3028 அடிவரை கடலினுள் சென்றிருக்கின்றனர். இவர்கள் இருவரும்தான் முதன் முதலாகக் கடலுக்குள் இவ்வளவு ஆழம் சென்று மீண்டவர்கள். 1934-ம் ஆண்டில் இவர்கள் இப்பெரும் சாதனையைச் செய்துமுடித்தனர். பார்டன் மட்டும் தனியாக 1949-ல் எஃகுப் பாய்ச்சல் உடை தரித்து 4500 அடி ஆழ்கடலினுள் சென்று மீண்டார்.

நீர் மட்டத்திற்கு அடியில் ஒளி மிகுதியும் குறைந்த அளவே இருக்கும். முதல் 200 அல்லது 300 அடி ஆழம்வரை சிவப்புக் கதிர்கள் நுழைந்திருக்கும். அதோடு அவ்வண்ணக் கதிர்கள் முடிவடைந்து விடுகின்றன. பகலவனின் வெம்மையும் அதோடு நின்றுவிடுகிறது. பின்னர் பசுமை நிறம் 1000 அடிவரை தென்படும். அதற்கும் அப்பால் முற்றிலும் இருள் சூழ்ந்திருக்கும். எப்பொருளும் பார்வையில் படாது. நாம் கண்டு மகிழும் அழகிய நீலவண்ணத்தை அங்கே காணமுடியாது. அமைதியும் இருளும் சூழ்ந்து நம்மைத் திக்கு முக்காட வைக்கும். நம்மையும் அறியாமல் உள்ளத்தில் அச்சம் மிகுந்துவிடும்.

தெளிந்த நீர்ப்பகுதியில் ஆயிரம் அடி ஆழம்வரை ஊதா நிறக் கதிர்கள் பாய்ந்திருப்பதுண்டு. இவற்றைக் கடந்து சென்றபின் நாம் காண்பதெல்லாம் கருங்கடல் ஒன்றுதான்.

அந்த ஆழக் கருங்கடற் பகுதியில் வாழும் உயிரினங்களுக்கு, தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எந்தப் பாதுகாப்பான இடமும் கிடையாது. எப்பொழுதும் பகைவர்களுக்குப் பலியாகத் தயாராகவே இருக்க வேண்டும். கதிரவனின் ஒளி பாய்ந்திருக்கும் 300 அடி ஆழம்வரைதான், நீர்ச் செடிகள் வளர்ந்திருக்கும். அதற்குக் கீழே எந்தத் தாவரமும் வளரவோ வாழவோ முடியாது. அங்குள்ள உயிரினங்கள் முரட்டுத்தனமாக ஒன்றையொன்று எப்பொழுதும் தாக்கிக்கொண்டே இருக்கும். அங்கு உணவுக்காக வெறியோடு கூடிய போட்டிகளும், சிறிய மீன்களைக் கூர்மையான பல் வரிசைகளையுடைய பெரிய மீன்கள் விழுங்குவதும் சதா நடைபெறும் சம்பவங்களாகும். பெரும் மீன்கள் தம் வாய்களைத் திறக்கும் போது அவைகளைவிடப் பன்மடங்கு பெரிதான மீன்களை விழுங்கக்கூடிய அளவு விரிந்திருக்கும்.

ஆழ்கடல் மீன்களில் பலவற்றின் தலைகளில் ஒளி விளக்குகள் அமைந்திருக்கும். அவைகள் செல்லும்போது அந்த ஒளி அவற்றிற்குப் பெரும் உதவியாக இருக்கும். இரை தேடுவதற்கு அவை சிரமப்படுவதில்லை. சில மீன்கள் தங்கள் உடல் முழுதும் வரிசையாக விளக்குகள் அமையப் பெற்றிருக்கும். அவற்றின் வாழ்விடத்தில் அடர்ந்து சூழ்ந்திருக்கும் இருட் படலத்தை நீக்கித் தமது தேவைகளை நிறைவு செய்யும் ஆற்றலை உடையன. நீர்மட்டத்தில் காணும் மீன்கள் உணவிற்குப் பயன்படும் மீனைப்போலவே நீலம் அல்லது பச்சை நிறம் உடையனவாகவே இருக்கின்றன. சற்று ஆழமாகச் சென்ருல் அழுத்தமான நீல நிறம் பொருந்திய நீரில் வாழும் உயிரினங்கள் தெளிந்த தூய நிறத்தினைப் பெற்றிருக்கின்றன. இத்தெளிந்த தூய நிறம், அவை பகைவரிடமிருந்து எளிமையாகத் தப்பித்துக் கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது.

ஆயிரம் அடி ஆழத்தில் வெள்ளி மீன்கள் நிறைந்திருக்கின்றன. மற்றும் சிவப்பு, பழுப்பு கருப்பு நிறமுடையவையும் ஆங்காங்கு தென்படும். 1500 அடி ஆழத்திற்கு அப்பால் எல்லாமே கருப்பு நிறத்தையே உடையன. சிற்சில இடங்களில் மிகநீண்ட வாலும் அழுத்தமான சிவப்பு பழுப்பு நிறம் அமைந்த மீன்களும் காணப்படுகின்றன.

சாதாரணமாக மிகவும் ஆழமான இருள் மண்டிய பகுதியில் உயிரினங்கள் இருக்காது என நம்பப் படுகிறது. ஆனல் அண்மைக்கால ஆராய்ச்சிகளின் பயனுய் அப்பகுதிகளில் தாவர இன உயிர்வகைகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக வெளியாகியுள்ளது. மற்றும் நீர்வாழ்விலங்குகளும் காணப்படுவதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

வில்லியம் பீப். கால் மைலுக்கு அப்பால் உள்ள பகுதியில் கெட்டியான மேல் அமைப்போடு கூடிய உயிர்ப் பொருள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இவற்றைப் போன்ற வலிவான மேலமைப்புடைய உயிரினத்தைத் தான் வேறெங்கும் பார்த்ததில்லையெனவும் கூறியிருக்கிருர்.

அண்மையில், பலநூறு அடிகளுக்கு அப்பால் அறிந்து கொள்ள முடியாத மேகத்திரட்சி போன்ற உயிர்ப் பிராணிகள் வாழுகிறதென்று கண்டு பிடித்துள்ளனர். எதிரொலிகளை அறியக் கூடிய கருவிகளின் வளர்ச்சியால் கடலின் ஆழத்தையறிய, புதுமையான கருவி கப்பல்களில் பொருத்தப் பட்டிருக்கின்றன. ஒலிகளைப் பதிவு செய்வதைக் கொண்டு, கடலின் ஆழம் அவற்ருல் கணக்கிட முடிகிறது. கப்பல் செல்லும் போது சில இடங்களில் கப்பல் இயந்திரத்தின் ஒலி கடலடியிலிருந்து எதிரொலிக்கப் படுவதைக் கேட்டுள்ளனர். ஆழத்தில் இருக்கும் அந்த உயிரினங்கள் ஒலியை மட்டும் எதிரொலிக்கச் செய்யும் அமைப்பினைப் பெற்றிருப்பதோடல்லாமல் ஒளியும் எதிரொலிக்கும் தன்மையை உடையன.

1942ல் கடற்பயணத்தை மேற்கொண்டிருந்த மூன்று விஞ்ஞானிகள் கப்பலிலிருந்து அனுப்பிய ஒலி அலைகள் கடலடியிலிருந்து எதிரொலித்ததைக் கேட்டதாகத் தெரிவித்திருக்கிருர்கள். இப்படிப் பட்ட உயிர்ப் பிராணி படிவம் போன்ற அமைப்பைப் பெற்றது. இப்படிவ அமைப்பு பரவலாக 300 மைல்களுக்குப் பரவி 1000 த்திலிருந்து 1500 அடி ஆழத்தில் உள்ளது.

1945ம் ஆண்டில் மார்டின் ஜான்சன் என்பார் இதுபற்றிய வியத்தகு தகவல் ஒன்றினைக் கண்டறிந்து வெளியிட்டார். அப்படிவ அமைப்பு அனுப்பப்படும் ஒலியை மீண்டும் மேற்பகுதிக்கு-ஒலிவந்த திசைக்கு எதிரொலிப்பதோடு, அவ்வொலியைக் கீழ் நோக்கியும் மெல்லிய இசையொலி போல அனுப்புகிறதாம். ஒரே சமயத்தில் மேல்-கீழ்ப் பகுதிகளுக்கு இவ்வோசை எதிரொலிக்கப்படுகிறது. இரவு வேளைகளில் நீர்மட்டம் வரையும், பகல்வேளைகளில் ஆழமான பகுதி வரைக்கும் எதிரொலி கேட்கிறது. இது வியப்பான உயிரணுக்கள் சேர்ந்த அமைப்பினுல் உருவாகியுள்ளது என்பதைக் காட்டுகிறதல்லவா?

இத்தகைய உண்மைக்குப் புறம்பானது போலத் தோன்றும் அமைப்புப் பற்றி இப்பொழுதும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவை ஒரே சமயத்தில் கடலடியில் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. இதைப்பற்றி மூன்று கொள்கைகள் உள்ளன.

1. அது, படிவ அமைப்பும் நீண்ட வாலும் உடையதாய் இருக்க வேண்டும். இரவு வேளைகளில் நீர்மட்டத்திற்கு வந்து பகற்பொழுதில் ஒளி ஊடுருவும் ஆழத்திற்கடியில் சென்று மூழ்கிக் கொள்ளலாம்.

2. இது, மீனின் உடற்கூறுகளால் அமைந்திருக்கலாம். மீனின் உணவையே உண்பவையாக இருக்கலாம்.

3. குறைந்த அளவு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள பெரும் வியப்பை நல்கும் கருத்தே மூன்ருவதாகும். அப்படிவம் 'அக்டோபஸ்'விலங்கினத்தைத் சார்ந்ததாக இருக்கும். அவை மிகப்பெரிய பரந்த உருவ அமைப்பைக் கொண்டிருக்கும்.

என்ருலும் இன்னும் அதைப்பற்றிய தெளிவான முடிவுகள்வெளியாகவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பு கடலடியில் இறந்து கிடந்த திமிங்கலங்களின் வயிற்றில் இருந்த மீன்கள் புதுவகையானவையாக இருந்தன. கிழக்குப் பசிபிக் கடலில் இத்தகைய மீன்கள், இறந்தோ, உயிரோடோ காணப்பட்டதில்லை. மீன்துறை ஆய்வாளர்கள் இம்மீன்கள் மிகமிக ஆழமான பகுதியில் மட்டுமே வாழும் வகையைச் சேர்ந்தவை என்று கருதுகிருர்கள்.

மாபெரும், சதுரமான தலையையும் பயங்கரமான குகைபோன்ற வாயினையும் கொண்டுள்ள 'அக்டோபஸ்' குணத்தைச் சார்ந்த விலங்குகளை 1500 அடிக்கும் அதற்குக் கீழுமுள்ள பகுதிகளிலும் வேட்டையாடலாம். வட்ட வடிவமான கரிய மச்சத்தையுடைய தாய் இருக்கும் திமிங்கலத்திற்கும் அதற்கும் நடக்கும் சண்டை நம்மாலே நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பயங்கரமாக இருக்கும். இருளின் முழு உருவமும் புதைத்திருக்கும் ஆழக்கடலில் 70 டன் எடையும் 30 அடி நீளம்மும் பெரும் உருவமும் கொண்ட திமிங்கலங்களின் போராட்டம் எவ்வளவு அச்சந்தருவதாய் இருக்கும்? போரிடும் போது ஏறத்தாழ 50 அடி நீளத்திற்கு தமது நீண்ட கைகளை விரித்துச் சண்டை செய்யும்.

கடல்நீர் மட்டத்தில் காற்றின் அழுத்தம் சதுர அங்குலத்திற்கு சுமார் 15 பவுண்டுகள் உடையதாய் இருக்கும். நீருக்குள் நுழைந்தால் அதன் அழுத்தம் ஒவ்வொரு முப்பத்து மூன்று அடிக்கும் மாறுபடும். மனிதன் பாய்ந்து செல்லும் எல்லைவரை காற்றின் அழுத்தம் சாதாரணமாக ஒரு சதுர அங்குலத்திற்கு 45 பவுண்டுகளாக அதிகரிக்கும்.

ஆனல் நீரில் வாழும் உயிரினங்கள் நிரந்தரமாக அங்கேயே வாழ்ந்து வருவதால் அவையவை வாழும் இனங்களிலுள்ள காற்றின் அழுத்தத்திற் கேற்ப அவற்றின் உடல் அமைந்துள்ளது. ஆனல் ஒரு குறிப்பிட்ட எல்லையில் வாழும் பிராணி வேறு நிலைமைகள் அமைந்த பகுதிக்கு மாறிச் செல்லுமானல், அது அங்கே பிழைத்திருக்காது. எனவே கடல் ஒரே பரப்பாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனிச் சூழ்நிலைகள் அமைந்திருக்கும் விந்தையை நம்மால் உணர முடிகிறது.

நிலத்தில் வாழும் உயிர்கள் இடமாற்றத்தால் உயிர் வாழ்வு பாதிக்கப்படுவது போலவே, கடல் உலகத்திலும் அந்த நியதி நிலைத்திருக்கிறது.

கடல் உலகத்தில் உள்ள உண்மையான விந்தை கடினமான தோலுடைய திமிங்கலம்போன்ற பிராணிகளுக்கும் அழுத்தத்திற்கும் உள்ள தொடர்பு தான். அவை நேர் செங்குத்தாக கீழிருந்து மேலேயும் மேலிருந்தும் கீழேயும் பாய்ந்து செல்லும். இங்ஙனம் செங்குத்தாகவே நூற்றுக்கணக்கான அடிகள் நீரைக் கிழித்துப் பாயும். காற்றின் அமுக்கம் இவற்றின் பாய்ச்சலைப் பாதிப்பதில்லை. திமிங்கல வேட்டையின் பொழுது கயிற்ருல் பிணைக்கப்பட்ட தூண்டில் முள் உருவ வேல்களால் தாக்கப்பட்டதும் அவை நேர் கீழாக அரை மைல் தொலைவுக்குப் பாய்ந்து சென்று. உடனே நீர் மட்டத்திற்குத் திரும்பி வரும்.

ஆனல் பெரிய காற்றுப் பைகளையுடைய மீன்கள் அமுக்கத்தின் மாற்றத்தால் மிகுதியும் பாதிக்கப்படுகின்றன. உணவு தேடி அலையும்போது சில வேளைகளில் அவை வாழும் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மேற்பகுதிக்கு வந்துவிட்டால் மீண்டும் திரும்பிச் செல்ல இயலாமற் போய்விடும். காரணம் அவற்றின் உடலமைப்பு நீரின் அமுக்கத்தை எதிர்த்துக் கீழே போக முடியாமற் தவித்து விடுவதுதான். குறைந்த அழுத்தமுள்ள மேற்பகுதி நீருக்கு வந்ததும், காற்றுப்பை விரிவடைந்துவிடுகிறது. காற்றுப்பை விரிவடையப் பெற்ற மீன் கனம் குறைந்துவிடும். எனவே குறைவான அழுத்தமுள்ள நீரில் இருப்பதைத் தவிர, அவை அழுத்தம் மிகுந்திருக்கும் பகுதிக்குள் நுழையமுடியாமல் போய்விடுகிறது.

— 9-ம் பக்கம் பார்க்க —

நூல் நயம்

திருநணுச் சிலேடை வெண்பா

ஆக்கம் : புலவர் குழந்தை

வெளியீடு : இளங்கோ புத்தகசாலை ஈரோடு.

இன்றைய உலகில் சமுக்காள நெசவினால் இசை பெற்றுவிளங்கும் பவானி பழம் பெருநகரங்களில் ஒன்றாகும். கி. பி. 2-ம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்திலேயே பவானி பற்றிய குறிப்புகள் உள்ளன. தொடர்ந்து பதிற்றுப்பத்து, கொங்குமண்டல சதகம், சம்பந்தர் தேவாரம், பெரிய புராணம், அருணகிரி திருப்புகழ், பல்வேறு தனிப் பாடல்கள் அனைத்திலும் இடம்பெற்ற பழம்பதி பவானி.

அதன் தொல் பழந்தமிழ்ப் பெயர் பெருவானி—வானி—வானிகூடல்—நணு—நண்ணு ஆகிய பலவாயிருப்பினும், பெருவானி ஒன்றே பெருவழக்காய் இருத்தல் வேண்டும். காரணம்; வானியாற்றின் வழிமேல் இருப்பதே. பின்னர் அது மருவிய பெயராகும்போது, பெருவானி—பருவானியாகவோ—பகுவானியாகவோ மருவி, இறுதியில் பவானி என்ற இடைக் குறையாய் நிலை பெற்றிருத்தல் வேண்டும்.

பவானியின் இலக்கிய வழக்குப் பெயரில் திருநணு புராணவாயிலாகப் பிரபலம் அடைந்த பெயர்.

அந்தப் பெயரால் சிலேடை வெண்பா இயன்றதால் திருநணுச் சிலேடை வெண்பா என்பது ஏட்டின் பெயராயிற்று.

புலவர் குழந்தை என்ற உடனே. தமிழர் நெஞ்சத்தில் இராவண காவியம் நினைவு வரும். இராவண காவியம் இயற்றிய அவரே திருநணுச் சிலேடை வெண்பா இயற்றினார் என்று சொன்னால் நூலின் சிறப்புக்குப் போதுமானதே.

ஆனால் விருத்தப்பாக்கள் விரவிய காவியம் இயற்றும் திறம் வேறு. சிலேடைச் சொற்களைத் தேடியலைந்து வெண்பா இயற்றும் திறம்வேறு. விருத்தப் பாக்களைவிட வெண்பாக்கள் கடினம். வெண்பாவிலும் இருபொருள் செறியச் சிலேடை வெண்பா இயற்றுதல் மிகக் கடினம்.

நிறைந்த புலமைமிக்காருக்கே கைவரத்தக்கது சிலேடை வெண்பா. புலவர் குழந்தையின் சிலேடை வெண்பாக்கள் காலத்தால் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட புலவர்களின் பாடல்களைப்போல் செய்யுள் அமைதி பெற்று, பொருளாழம் கொண்டு, ஓசையும், அழகும், பெற்று விளங்குகிறது திருநணுச் சிலேடை வெண்பா நூல். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவி வேந்தராகப் புலவரை உணர்த்துகிறது இந்நூல்.

சிந்தனையாளர் மாக்கிய வெல்லி

ஆக்கம் : நாரா, நாச்சியப்பன்.

வெளியீடு : பிரேமா பிரசுரம்.

உலகத்தில் பல்வேறு துறை குறித்து நூல் இயற்றிய சிந்தனையாளர்கள் ஏராளம். ஆனால் அரசியல் சூழ்ச்சிகளைத் தொகுத்து நூல் உருவாக்கிய நல்லறிவாளர்கள் அதிகமில்லை—மிகச்சிலரே. விரல் எண்ணிக்கையில் சொல்லிவிடலாம் பிளேட்டோ, கௌடில்யர், திருவள்ளுவர், மாக்கியவெல்லி என்று.

இன்னும் சிலர் இருக்கின்றனர் என்றாலும். அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக இல்லை. இத்தகைய குறிப்பிட்ட சிலரினும் அரசியலில் நிர்வாகத் தலைவனுக்கு ஏற்படும் தொல்லைகளையும் தொல்லைகளே தோன்றாமல் செய்யும் சூழ்ச்சிகளையும் தோன்றிய தொல்லைகளை வேரறுக்கும் வழிவகைகளையும் ஒளிவின்றி மறைவின்றி எடுத்துச் சொன்னவர்கள் மாக்கிய வெல்லிபோல் எவரும் இல்லை.

மாக்கிய வெல்லியின் முழுப்பெயர் நிக்கோலோ மாக்கிய வெல்லி என்பதாம். இத்தாலி நாட்டுப் பிளாரன்ஸ் நகரில் 3-5-1469-ம் நாளில் ஏறக்குறைய இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் மாக்கிய வெல்லி பிறந்தான்

அவன் ஏராளமான சரித்திரங்களையும் ஆராய்ச்சி நூல்களையும் கவிதைகளையும் எழுதியிருக்கிறான். ஆனால் அவனை இறவாநிலைக்கு உயர்த்திய நூல் 'அரசன்' (Prince) என்னும் தலைப்பில் எழுதிய அரசியல் சூழ்ச்சி (இராச தந்திரம்) நூலேயாகும்.

அந்த நூல் அரசியல் நிர்வாகத் தலைவர்களுக்கு மட்டுமன்றி, மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில், அரசியல் தகிடுதத்தங்களைக் குடிகளாகிய பொது மக்களும் உணரும்படி காட்டிக் கொடுக்கும் கலங்கரை விளக்கம்போல் நிலவுகின்றது.

ஆங்கிலம்—தமிழ் ஆகிய இருமொழி அறிஞரும் தென்றலின் முன்னாள் துணையாசிரியாகப் பணியாற்றியவருமான திரு. நாரா. நாச்சியப்பன் அவர்கள் மாக்கிய வெல்லியை ஆக்கியிருக்கிறார்கள். மாக்கிய வெல்லியின் கட்டுரைகள் ஆராய்ச்சி, கதை. ஆகியவை பல்வேறு துண்டுகளாக ஆங்கில மொழியில் கிடக்கின்றன. அவற்றைத் தேடித் தொகுத்து-ஒன்றாக்கி தமிழில் தந்த பெருமை திரு. நாச்சியப்பனைச் சேர்ந்ததே.

நீண்ட நெடுங்காலம் அரசியல் சிந்தனை இன்றி இருந்த தமிழ் மக்கள் அரசியல் நிர்வாகத் தலைவர்கள் எத்தகைய சமயங்களில் எப்படிப்பட்ட சூழ்ச்சிகளை—அக்கிரமங்களைச் செய்து ஆதிக்கத்தை நிலைநாட்டுகிறார்கள். சூழ்ச்சியில் சிக்கிய பொதுமக்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாவார்கள் என்பனவெல்லாம் கண்டறிய இந்நூல் துணைபுரியுமென்று நம்புகிறோம்.

சிந்தனையாளர் வால்டேர்

ஆக்கம் : திருமதி. சாவித்திரி, எம். ஏ.

பதிப்பு : அரு. இராமநாதன்.

வெளியீடு : பிரேமா பிரசுரம் சென்னை-24.

இன்றைய ஐரோப்பாவின் நாகரிகத்திற்கு நடு நாயகமாய்த் திகழும் பிரான்சு, கி. பி 17-ம் நூற்றாண்டில் பழமைவாதிகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் நிலைக்களனாகத் திகழ்ந்தது.

உலகறிந்த 'பாஸ்டில்' சிறைச்சாலையும், போக போக்கிய ஆடம்பர வாழ்வால் மனித இதயத்தையே மாற்றிக் கொண்ட பிரபு வர்க்கத்தாரின் ஆணவ அட்டகாசமும், மனிதப் பண்பாட்டையே வதைத்துக் கொண்டிருந்த நேரம் அது.

அத்தகைய நேரத்தில், அத்தனை தீமைகளையும் தீய்த்து நீறாக்கும் தீப்பிழம்பாக 21-11-1694-ம் நாளில் வால்டேர் தோன்றினான். அவனுடைய சிந்தனையில் தோன்றிய தீப்பொறிகள் பிரான்சு நாட்டில் மட்டுமன்றி ஐரோப்பாவில் கிடந்த குப்பை கூளங்கள் அத்தனையும் சுட்டெரிக்கத் தொடங்கிற்று. சிந்தனையாளர்க்கு மாமூலாக வரும் எதிர்ப்பு இழிவு, ஏமாற்றம், சிறை, தண்டனை ஆகிய எல்லாம் அவனுக்கும் கிடைத்தன.

அத்தகைய அறிஞனின் வரலாற்றையும் கட்டுரைகளையும் கதை நாடகங்களையும் தத்துவங்களையும் அரிதின் முயன்று சுருக்கி வடித்து உருவாக்கி இருக்கிறார் திருமதி சாவித்திரி அம்மையார். அரிய முயற்சிகளில் நேரிடும் சிறிய பிழைகள் இதிலும் இடம் பெற்றே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக :—

'கடவுள் இருக்கிறார் என்ற எண்ணத்தை இயற்கை நமக்கு உண்டாக்கவில்லை. அப்படியானால் அது மனித உள்ளத்தின் தத்துவ விசாரணை அளித்த பலனா? அப்படியும் இருக்க முடியாது. ஏனென்றால் மக்கள் தத்துவ வாதிகளாக ஆவதற்கு முன்பே கடவுளைப் பற்றி அறிந்து கொண்டனர்.

ஆதிமக்கள் இயற்கையின் மகத்தான சக்திகளைக் கண்டு தமக்குமேல் ஒரு கடவுள் இருக்க வேண்டும் என்று உணர்ந்தனர்.''

என்னும் சொற்றொடர் முன்னுக்குப் பின் முரணான கருத்தைத் தொட்டுக் கொண்டிருப்பது மூல நூலாசிரியன் கருத்தைத் தொடராமல் வெறும் சொற்களைத் தொடர்ந்து சென்றிருப்பதன் விளைவு என்றே கூற வேண்டும். மொத்தத்தில் வால்டேர் பயனுடைய நூல். தத்துவ வாதிகளின் புதையல்.

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

தான் வாழ்ந்து பழகிய அந்தப் பகுதிக்கேற்ற உடலமைப்போடு கூடிய அவை, கடலின் மேல் மட்டத்திற்கு வந்து தங்க நேரிடும்போது, அமைதியான நிலைமை மாறி அலைகளால் அலைக்கழிக்கப்படுகிறது. அலையின் பாய்ச்சலைத் தாங்கும் ஆற்றலற்ற உடலினவாதலின் விரைவில் இறந்து போகும்.

இங்ஙனம் வியப்பு, அச்சம், தெரிந்து கொள்ள ஆர்வத்தைத் தூண்டும் கவர்ச்சியான சம்பவங்களையும் காட்சிகளையும் கொண்டிருக்கும் கடல் உலகம் ஓர் தனி உலகமாகவே இருந்து வருகிறது. மண்ணுலகப் பரப்பில் அது கொண்டிருக்கும் தொடர்பு, மேலோட்டமாகப் பார்க்கும்போது வீசும் அலைகள், நமக்கு அவ்வளவு பெரிய வியப்பையளிப்பதில்லை. ஆனால் அந்த உலகின் உட்பகுதி நிலைமைகளையும் இயல்புகளையும் அவற்றிற்கேற்பப் பிறந்துவாய்ந்து மறைந்து, இயற்கையின் நியதிக்கு இணைந்து கிடக்கும் உயிரினங்களின் வரலாறு நம்மை மிகவும் கவரும் அழகினையுடையது.

அலை வீசும் மேற்பரப்பு, அதைக் கடந்து சென்றால் அமைதியான ஆழ்கடல் இவ்விரண்டின் நிலைமைகளில் நம்முடைய அறிவுக்குக் கிடைக்கப் பெறும் வளமான உணவுகளுக்கு மேலும் சுவையூட்டுமளவுக்கு ஆழ்கடலுக்கடியில் மறைந்திருக்கும் நிலப் பரப்பு தன்னிடம் அளவிறந்த விந்தைகளை உள்ளடக்கியிருக்கிறது.

அயலவர் அஞ்ச அண்ணா
அன்பெனும் நாரில் கோத்துப்
புயமொடு புயங்கள் சேரப்
புத்தொளி உள்ளம் சேர
இயலிசை கூத்துக் கூடி
எழில்நகை சிந்தி நின்றால்
மயல் கொளாத் தமிழர் உண்டோ
மாதிரு வொற்றி ஊரில்?

விழியைக் கொடுத்தான்-அவள் வெறியைத் தந்தான்

- தியாகன் -

ஆசையை ஒழித்துவிடு என்ற புத்தனின் தத்துவங்களைச் சிரமேற் தாங்கிச் செயலாற்றி வந்த சக்கரவர்த்தி சாம்ராட் அசோகன்-ஆடியொடுங்கிய காலத்தில் திஷ்யரட் சதையென்னும் அழகியொருவளைத் திருமணம் செய்துகொண்டான். அவனோ அனுபவித்துச் சலித்த கிழவன்; அவளோ இன்ப இரவுகளை எதிர் பார்த்து ஏங்கி நின்ற பருவக்குமரி. காதளவோடிய அவள் கண்களிலிருந்து கனியும் சீதளப் பார்வைக்காக அவளை வட்ட மிட்டலைந்த வாலிபப்பட்டாளம் எவ்வளவோ இருந்தது. ஆனால் அவள் ஏன் அசோகனைத் திருமணம் செய்துகொண்டாள் என்ற ரகசியம் அவளுக்கல்லவா தெரியும். அவள் எண்ணத்தை ஈடேற்ற இன்று முடிவு செய்துவிட்டாள். அந்தமுடிவை நிறைவேற்ற, நட்ட நடுநிசியில் தர்மவிவர்த்தனன் தூங்கிக்கொண்டிருக்கும் தனி யறைக்குள் நுழைகிருள்.

காட்சி 6. தர்மவிவர்த்தனின் படுக்கையறை

திஷ்யை : இளவரசே...விவர்த்தனரே...அடாடடா ! இந்த வயதில் இப்படித் தூக்கம் எப்படித்தான் வருகிறதோ உங்களுக்கு ?

தர்ம : யாரது ?

திஷ்யை : கண்ணைத் திறந்து பாருங்கள். என்ன விழிக்கிறீர்கள் ?- ஊங்...எழுந்திருங்கள்.

(விவர்த்தனன் பரபரப்போடு எழுந்து நிற்கிருன்)

தர்ம : திஷ்...ம...மகாராணி ! என்ன ? இன்னும் தூங்கவில்லையா தாங்கள் !

திஷ்யை : ஏக்கத்தால் தத்தளிக்கும் என் விழிகள் - தூக்கத்தால் இளைப்பாறி எத்தனையோ நாட்களாகிவிட்டனவே.

தர்ம : மகாராணி !

திஷ்யை : மக்களுக்குத்தானே - உங்களுக்கல்லவே-ஏன் நிற்கிறீர் கள்? உட்காருங்கள்.

(கையைப் பிடித்து உட்கார வைக்கிருள்)

தர்ம : அரசியாரே...

திஷ்யை : ஏன் இளவரசே !

தர்ம :............?

திஷ்யை : விவர்த்தனரே-அன்று நீங்கள் வெறுப்போடு திஷ்யை என்று என்னை அதட்டியபோது, அந்தச் சொல்லிலே உயிரும் உணர்வும் இருந்தது. நயமும் சுவையும் தொனித்தது. இன்று மகாராணி என்று அழைக்கிறீர்கள். என்ன இருக் கிறது இதில்? மதிப்பிருக்கிறது; ஆனால் உயிரே இல்லையே ! நான் எதிர்பார்க்கும் உணர்வும் கிளர்வும் இல்லவே இல்லையே.

தர்ம : தூக்க மயக்கமா ?

திஷ்யை : யாருக்கு ? எனக்கா உங்களுக்கா ? நான் திட்டமிட்டுத் தான் வந்திருக்கிறேன். திரும்பிப் பாருங்கள் இப்படி. இளவரசே-இது தூக்க மயக்கமல்ல...காதல் மயக்கம்.

தர்ம : மயக்கமல்ல மகாராணி-இது வெறி.

திஷ்யை : அஹ் - ஹ-ஹா - ஹா. வார்த்தைகள் எப்படியிருந்தால் என்ன ?-என் எண்ணம் ஈடேறினுல் சரிதான்.

தர்ம :சாம்ராட் அசோகரின் புதிய பட்டத்தரசியாரே - மோகம் என்னும் மேகம் உங்கள் கண்களை மறைக்கிறது. எச்சரிக்கை யாக இருங்கள், ஏமாந்துவிடாதீர்கள். அற்பநிமிட ஆசைக் காகக் கற்பைச் சிதைக்கக் கங்கணம் கட்டவேண்டாம். முறை தவறிய காதல், வெறி விளைவுக்கும் வித்து மறந்துவிடாதீர் ! தங்கள் முன்னுல் நிற்கும் தர்மவிவர்த்தனன் தங்கள் மகன்.

திஷ்யை : புத்தபிட்சுக்களிடம் பாடம் பயின்ற மாணவரல்லவா தாங்கள். உங்கள் போதனை அழகாக இருக்கிறது. ஆனால் இடந்தவறிச் சொல்கிறீர்களே. அனுபவித்துச் சலித்தவர் களிடம் இதைச் சொன்னுல் அப்படியே ஒப்புக்கொள்வார்கள். நான் பசியோடு அல்லவா இருக்கிறேன் - இந்த உபதேசம் எனக்கு எப்படிப் பலனளிக்கும்.

விவர்த்தனன் : மகாராணி-நான் கண்டிப்பாகச் சொல்லுகிறேன்.

திஷ்யை : விவர்த்தனு-நான் கனிவோடு கேட்கிறேன்-ஒருதரம்; ஒரே ஒருதரம்...என்னைப் பேதையாக்கிப் பிதற்ற வைத்த உன் பெரிய விழிகளை துடிக்கும் என் மார்பகங்களோடு புதைத்துக் கொள், வா-வா-விவர்த்தனு-வா.

(கண்ணிமைக்கும் நேரத்தில் விவர்த்தனன் தன் இடுப் பிலிருந்த கட்டாரியை எடுத்து தனது இரு விழிகளையும் குத்திக் குருடாக்கிக்கொள்கிருன்)

திஷ்யை : விவர்த்தனரே (திஷ்யை அலறுகிருள்.)

விவர்த்தனன் : மகாராணி-எந்த விழிகளின் அழகில் மயங்கி நீங் கள் வழி தவறிச் செல்ல முயற்சித்தீர்களோ - அந்த விழிகள் அந்தகமடைந்து அவிந்துவிட்டன, இனி அது உங்களை மயக்காது-போய் பாருங்கள்.

வெண்பாப் போட்டி 15.

★

சென்ற இதழில் வெளியிட்டிருந்த ஈற்றடி "செண்டாக வந்த செருப்பு" கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக 'வேலூர்' என்று தொடங்கி திருவொற்றியூர் என்று முடிக்க.

மாதிரி

வேலூர்...
.................................———..............
....
..............திருவொற்றி யூர்.

இறுதி நாள் 18-3-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

விரைவில் வெளிவருகிறது!

கவிஞர் **கண்ணதாசனின்** சிறப்புப் பாயிரத்தோடு- தென்றல் இலக்கியப் போட்டியில் பரிசு பெற்ற

இசைக்கோயில்

இயற்றியவர் : புலவர் பண்ணன்.

கலைச்செல்விப் பதிப்பகம்

சென்னை-5

முதற் பக்கத் தொடர்ச்சி

"இனியொன்றும் நடக்காதல்லவா ?" என்றார்.

"எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது" என்றேன்.

நண்பர் சிரித்தார்.

நானும் சிரித்தேன்.

அப்பாடா இப்படிச் சிரித்து எத்தனை நாளாகி விட்டது.

★

இளைய திராவிட சமுதாயம் நடக்கட்டும்.

இனிய குரல்கள் ஒலிக்கட்டும்.

முகபடாம் போட்ட வண்டிக் குதிரையைப் போல்—

கண்கள் பாதையைப் பார்த்து நடக்கட்டும்.

எண்ணம் செயலாகட்டும்.

ஏற்ற கொள்கைகள் நிறைவேறட்டும்.

விடுதலை மலரட்டும்.

விளக்கொளி பரவட்டும்.

உள்ளம் உயரட்டும்.

உண்மை நிலவட்டும்.

கள்ளம் கருகட்டும்.

கவலை மறையட்டும்.

காற்றும், நிலவும், கதிரும் போல் காலகாலங்களுக்கு, விடுதலை வீரர்களின் பெயர்கள் நிலைத்து நிற்கட்டும்.

வாழ்க !

★

கண்ணதாசன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில், புதன் சனி இரண்டும் ஆரியச் சொற்களாக இருக்குமோ என்று, சிலர் ஐயுறுவர் அப்படி ஐயுறப் போதுமான காரணமில்லை. தமிழ்ச்சொல்லாகவே பல இருக்கின்றன. எடுத்துக் காட்டாக புதனை அறிவன் என்றும் சனியைக் காரி என்றும் கூறுவதைக் கொள்ளலாம்.

அறிஞர் கால்டுவெல், புதனையும் சனியையும் வேற்று மொழியாகக் கருதியே, தமிழர்கள் 5 கிரகங்களைக் கண்டிருந்தார்கள், என்று. நிச்சயமாகக் கூறிவிட்டுத் தலை மயங்குகிறார். 27 நட்சத்திரங்களை அறுதியிடுவதைவிட, புதனையும் சனியையும் கண்டறிந்தது அதிசயமில்லை என்பதை, சிறிதளவு வான நூல் அறிவு பெற்றவரும் ஒப்புக்கொள்வர்.

"மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகர்க் கடகம்நிதிசேர்"

என்று வரும் கம்பராமாயணச் செய்யுளில், இராமன் சித்திரை மாதம் நவமி திதி புனர்பூச நட்சத்திரம், கர்க்கடக ராசியில் பிறந்தான் என்னும் பொருளுடையதாக வரும்போது 'புனர்பூசம்' என்னும் ஆரியச் சொல்லை விடுத்து 'கழை' என்னும் தூய தமிழ்ச் சொல்லை ஆண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் காலத்திலேயே 'ராகு—கேது' என்னும் ஆரியக் கற்பனைப் புரளி பிரபலமாகி. குறளில், தெளிவாக மறுக்கப்பட்டிருந்தும். குறளுக்கு உரை கண்டவர்கள் செவ்விய நுண்ணிய உரை காணமல் மழுப்பி விட்டிருக்கின்றனர்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று"

என்னும் குறளுக்கு உரை செய்த அத்தனை பேரும் தெளிவில்லாமல் "காதலனை ஒருநாள் கண்டேன். அதுபற்றிய அலரோ, திங்களைப் பாம்பு கொண்டதுபோல் உலகறிந்த ஒன்றாக ஆகிவிட்டது" என்றே உரை செய்தனர்.

காதலனை ஒருநாள் கண்டேன். அதுபற்றிய அலரோ திங்களைப் பாம்புகொண்டது என்னும் கற்பனைபோல் எனக்கும் அவனுக்கும் தொடர்பு ஏற்பட்டதாக கற்பனை செய்து பழி போடுகிறார்கள். என்பதே சரியான உரையாகும். கண்டதைக் கொண்டதாகக் கூறுகிறார்கள் என்பது குறளாக இருக்க 'உலகறிந்த' என்ற ஒரு சொல்லை வேண்டா நிலையில் வருவித்து, வலிந்து பொருள் கொண்டது, ஏன், என்பது நமக்கு விளங்கவில்லை.

மேலே கண்ட சான்றுகளிலிருந்து வான நூலின் பிறப்பிடம் தமிழ்தான் என்பதும், ஆரியம் தமிழிலிருந்து வான நூலை இரவல் பெற்று, தனது சொந்தம் போல மொழிபெயர்ப்புத் திறமையால் பொய்யையும் புலையாட்டையும் வளர்த்து சாதகம், பிரஸ்னம் என்பதை எல்லாம் அதனில் ஒட்டி அறிவுடையோர் வான நூலையே இகழத்தக்க அளவுக்கு மாசுபடுத்திவிட்டது என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

ரிக் வேதத்திற்குப் பின்னால் தோன்றிய யஜுர் வேதத்தில் வேத வேள்வி ஒவ்வொன்றும் இன்னின்ன மாதம், இன்னின்ன கிழமை திதி நட்சத்திரங்களில் தான் செய்ய வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ரிக் வேதத்தில் இத்தகைய 'விதி' சொல்லப்படவில்லை.

ஆனால், யஜுர் வேதமும் அதனைத் தொடர்ந்த சாம, அதர்வண வேதங்களும், ரிக் வேதத்திலிருந்து ஒரு பகுதி மட்டும் பிரித் தெடுக்கப்பட்டவை என்று, அறிஞர் தேவநேயப்பாவாணர் உள்ளிட்ட பலரும் சொல்கின்றனர்.

திருக்குறளில் 'துறவு' முதலிய ஏதாவதொரு அதிகாரத்தை மட்டும் எடுத்துத் தனியொரு நூலாக்கினால் எப்படியோ, அப்படியே ரிக் வேதத்திலிருந்து, யஜுரும். பிறவும், பிரித்து விரிக்கப்பட்டன என்பது தேவநேயர் போன்றவர்களின் கருத்தாகும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட யஜுர் முதலான வேதங்களில், மூலநூலான ரிக் வேதத்தில் இல்லாத புதுமைகள் இருந்தால் அந்தப் புதுமைகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவைதான் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

அதன்படி ரிக் வேதத்தில் இல்லாத வானநூல் கருத்துக்கள் யஜுர் முதலியவற்றில் கூறப்படுவதால் அந்தவான நூல் தமிழின் இரவலாகத்தானே இருத்தல் வேண்டும்.

தமிழின் தொன்மையான வானநூற்கள் கடல்கோள் முதலியவற்றால் அழிந்து பட்டுப் போகவே. ஆரியர்கள் இரவலைத் தனதாகக் காட்டிக் கொள்ள ஏதுவாகி விட்டது.

"மாசரா"

விலை வாசி இறங்காதது ஏன் ?

வடவர் ஏகாதிபத்தியம் தோன்றிய பிறகு ஆண்டுதோறும் ஏறிவரும் விலைவாசி ஏற்றம், திடுக்கிடத்தக்கதாக இருக்கிறது.

1939-க்குப் பிறகு உலகப் போரின் காரணமாக விலைவாசிகள் ஏறத் தொடங்கின.

போர் முடிந்ததும் விலைவாசிகள் இறங்கிவிடும் என்று எல்லாரும் நம்பி இருந்தனர்.

பழைய அனுபவம் அப்படி நம்பச் செய்தது.

முதலாம் உலகப்போர் (1914-1918) காரணமாக உயர்ந்த விலைவாசி, போர் முடிந்தவுடன் 'மளமள'வென்று சரிந்து விழுந்ததை சொல்லிக்கொண்டிருந்தார்கள் மக்கள்.

உண்மையும் அதுதான் !

முதலாம் உலகப்போரில், 1914-ல் ஏறத்தொடங்கிய விலைவாசி 1918-ல் எட்டிப்பிடிக்க முடியாதபடி உயர்ந்து 1920-ல் சமநிலைக்கு வந்துவிட்டது.

அதுபோலவே இரண்டாம் போரில் 1938-ல் ஏறிக்கொண்டிருந்த விலைவாசி 1947-ல் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்குப் போயிருந்தது.

ஆனால், ஏறிய விலை இறங்கவே இல்லை காரணம்; இது தான்:

அதே நேரத்தில் வடநாட்டாருக்கு இந்திய ஏகாதிபத்தியம் கிடைத்தது.

அந்த ஏகாதிபத்தியத்தையே 'சுதந்திரம்' என்று தவறாகக் கருதிய தென்னாட்டு ஏமாளி மக்கள், விரைவில் விலைவாசி இறங்கிச் 'செழிப்பு' ஏற்படும் என்று, கருதிக்கொண்டதில் ஆச்சரியமில்லை.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில், போரின் காரணமாக உயர்ந்த விலைவாசி, போர் முடிந்ததும் இறங்கிவிட்டதை எண்ணிக்கொண்டால்; ஏகாதிபத்தியத்திற்கும், விலைவாசி ஏற்றத்திற்கும், சம்பந்தம் இல்லை என்றே தோன்றும்,

ஆனால், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தன்மை வேறு, வடவர் ஏகாதிபத்தியத்தின் தன்மை வேறு,

அந்த வேற்றுமைகள் எவை எவை என்பது கட்டுரை முடிவில் விளங்கும். முதலில் விலைவாசி ஏறும் காரணங்களைக் கண்டறிவோம்.

வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒருவகையை ஜீவாதாரப் பொருட்கள் என்றும், மற்றொரு வகையைப் போகபோக்கியப் பொருட்கள் என்றும் நமது வசதிக்காகப் பெயரிட்டுக்கொள்வோம்.

உணவு, உடை, மருந்துகள், மற்றும் சில ஜீவாதாரப் பொருட்களாகும்.

மோட்டார், சைக்கிள், கடிகாரம், சோப்பு, சீப்பு, வாசனைத் திரவியங்கள் மற்றும் பல போக போக்கியப் பொருட்களாகும்.

இந்த போக போக்கியப் பொருட்களில்; சிலநேரம் போக போக்கியமாகவும் சிலநேரம் ஜீவாதாரமாகவும், பயன்படுகிற பொருட்களும் உண்டு.

மொத்தத்தில் ஜீவாதாரப் பொருட்களைவிட போக போக்கியப் பொருட்களே அதிகம்.

இன்றைய நாகரிக மனித வாழ்வில், ஜீவாதாரப் பொருட்களால் ஏற்படும் செலவைவிட போகபோக்கியப் பொருட்களால் ஏற்படும் செலவே மிக அதிகம்.

ஒரு மனிதனுடைய வருமானத்தில் மிக்க ஏழையாய் இருப்பவனுக்குக்கூட உணவு, உடை, வைத்தியம் போன்ற செலவுக்குச் சமமாக வெற்றிலைபாக்கு பீடி, சிகரட், காபி, சினிமா, பிரயாணம் முதலிய செலவுகள் ஏற்படுகின்றன. மத்திய தர வாழ்வு வாழ்பவருக்கும், செல்வங் கொழிக்கும் வாழ்வினருக்கும் உணவு உடை மருந்துச் செலவைவிட போகபோக்கியச் செலவு பலமடங்காகிவிடுகிறது.

ஒரு நாட்டிலுள்ள ஏழை பணக்காரன் அத்தனை பேருக்கும் கிடைக்கிற மொத்த வருமானத்தையே தேசீய வருமானம் என்று சொல்வார்கள்.

அதுபோலவே, எல்லாரும் செலவழிக்கிற மொத்தச் செலவை தேசீயச் செலவு என்பார்கள்.

இந்த வருமானமும் செலவும் அயல்நாடுகளின் தொடர்பால் வருவதை, முறையே அந்நிய வருமானம், அந்நியச் செலாவணி என்று சொல்வார்கள்.

அதாவது அயல்நாட்டிலிருந்து வாங்கும் பண்டங்களால் ஏற்படும் செலவை, அந்நியச் செலாவணி என்றும், அந்நிய நாட்டுக்கு விற்பனை செய்யும் பண்டங்களால் வரும் வருமானத்தை அந்நிய வருமானம் என்றும் சொல்வார்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்தில் எவருக்குமே தொடர்பில்லாத அந்நிய ஏகாதிபத்தியம்.

அதோடு ஆங்கில ஏகாதிபத்தியம், உலகின் மிகப்பெரும் சாம்ராஜ்யம் பெற்றிருந்ததால், அது, தனது சாம்ராஜ்ய நாடுகளுக்குள்ளே ஒரு பக்கத்தில் அதிகம் உற்பத்தியாவதை குறைவான பகுதிக்குக்கொண்டு செல்ல அனுமதித்துக் கொண்டு சாம்ராஜ்ய நாடு முழுவதையும் தனது வியாபாரச் சந்தையாக மட்டும் வைத்துக்கொண்டிருந்தது.

இந்தியாவில் அரிசி பற்றாக்குறையாக இருந்தால் பர்மாவிலிருந்து அரிசியை வரவழைத்தும், கோதுமை பற்றாக்குறையாக இருந்தால், ஆஸ்திரேலியா கானடா முதலிய இடங்களிலிருந்து வரவழைத்தும், தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு, தன்னுடைய வியாபாரத்தைக் கண்ணும் கருத்துமாக நடத்திக் கொண்டிருந்தது.

(தொடரும்)

எம். எஸ். இராமசாமி.

வெண்பாப் போட்டி

பச்சைத் தமிழரின் பண்பு.

"கத்துகடல் சூழ்நாடு கானமயில் ஆடிவரும்
முத்துவிளை மோகனப் பொன்னுடு—எத்தர்களை
துச்சமெனத் தூளாக்கும் தோள்மறவர் பண்பெல்லாம்
பச்சைத் தமிழரின் பண்பு."

—"மலைவேந்தன்", அய்யம்பாளையம்.

மனையறம் காத்திடும்நல் மங்கைதான் என்றும்
துணையாக நிற்பாளுன் தொல்லைப்—பிணியறுப்பாள்
சச்சரவு தீர்த்திடுவாள் சாகாமல் காத்திடுவாள்
பச்சைத் தமிழரின் பண்பு.

—சரசுவதி கோவிந்தராசன், சென்னை-6.

மாற்றான் மொழிவளர்க்க மாத்தமிழை மாய்த்திடவே
ஏற்றான் பதவியெனில் என்செய்வோம் ?-வீற்றிருக்கும்
நச்சுக்கு நல்லறிவு நல்கிநலம் காண்பதன்றோ
பச்சைத் தமிழரின் பண்பு ?

—பூவை. அமுதன், சென்னை-6.

இல்லக்கிழத்தியரை இன்பத்திற் கேங்கவிட்டு
கொல்லுவிழி வேசியரைக் கூடுதல்போல்-நற்றமிழை
எச்சிமொழி யாக்குவதோ ? ஈனஇந்தி நோக்குவதோ ?
பச்சைத் தமிழரின் பண்பு.

—மணவை, கா. மாரன், கொட்டாப்பட்டி.

மானமும் வீரமும் மட்டிலா மாண்நலமும்
தானமும் சுற்றம் தமிழ்த்தொண்டும்-ஈனர்களை
அச்சமின்றி வீழ்த்தும் அருங்குணம்பே ராற்றலும்
பச்சைத் தமிழரின் பண்பு.

—இரா. இளங்கோவன், தைலாபுரம்.

வாழ வழியின்றி வந்தவர்க்கு இந்நாட்டில்
வாழ வழிதந்த மக்களின்று-ஏழ்மையினல்
எச்சிலை தேடும் இழிநிலைக்கு மாற்றியதே
பச்சைத் தமிழரின் பண்பு.

—வேணுதாசன், சென்னை-6.

"போரென்றால் பொங்கி எழுவதும்; புன்னகையார்
கார்குழல் கண்வீச்சின் காதலிலும் ;-பார்புகழ
மூச்செல்லாம் அன்பாய்நம் முத்தமிழைக் காப்பதுமே!
பச்சைத் தமிழரின் பண்பு."

—பா. வயணப் பெருமாள், காமாட்சிபுரம்.

சிங்கத்தின் வீரமும், செந்தமிழ நெஞ்சமும்,
பங்கமில் இல்வாழ்வும், பேரறிவும்-தங்கிநிற்க
அச்சம் வறுமை அடிமைநிலை நீக்குவதும்
பச்சைத் தமிழரின் பண்பு.

—பால. குருஞானசுந்தரன், இராயகிரி.

கச்சை எனக்கில்லை கண்மணிக்குப் பாலில்லை
துச்சமென எண்ணிநீர் தூங்காதீர்-அச்சம் ஏன் ?
மிச்சமுண்டு தாலியிதோ விற்றுவந்து காத்திடுவீர்
பச்சைத் தமிழரின் பண்பு.

—குறிஞ்சி. ப. இளம்பரிதி, அரூர்.

சுத்த உடையணிந்து சோம்பல் தனைநீக்கி
நித்தம் பிறர்நலத்தை நாடியே-மெத்தவும்
இச்சை மொழிவோர்க் கெடுத்துரைத்துத் தான்திருத்தல்
பச்சைத் தமிழரின் பண்பு.

—த. தட்சிணாமூர்த்தி, விழுப்புரம்.

நாடு, மொழிகாக்க நம்மாலே ஆற்றுக்கால்
கூடுறை ஆவி குலைத்திடுவீர் !-ஏடுவந்து
செப்பட்டும் சீரை; சிலையானல் வாழ்ந்திடுமோ
பச்சைத் தமிழரின் பண்பு ?

"கூர்வாள்" தஞ்சை (மாவட்டம்)

வேலுக்கு வேலெறிந்து வெஞ்சமரில் வெல்வதும்
நூலுக்கு நூலாக நூற்றெட்டு நூலுமிவண்
அச்சம் அகல அறிவுபெறக் கற்றிடலும்
பச்சைத் தமிழரின் பண்பு.

—திருமகன், தேவகோட்டை.

மொழிநாடு, தன்னுட்சி, மூன்றுங்கண்,ணுகப்
பழிநாடும், செய்கை பரவா-வழிநாடி
இச்சை, பொதுநலத்தி, லிட்டுப் பணியாற்றல்
பச்சைத் தமிழரின் பண்பு.

"கடலோடி" பறங்கிப்பேட்டை.

கண்ணியம் தன்கடமை கட்டுப்பா டிம்மூன்றும்
கண்ணெனவே காத்துக் களிப்புறுவர்-பெண் எனினும்
அச்சமின்றி தன்செயலில் அஞ்சாமல் மிஞ்சுவதே
பச்சைத் தமிழரின் பண்பு.

கே. ஆர். கிருட்டினமூர்த்தி, காட்டேரிக்குப்பம்.

சட்ட சபையினில் ஊமைபோல் நிற்பதும்
வெட்டிக்கு மேடையில் வீண்சொல்லைக்-கொட்டுவதும்
கொச்சைமொழி பேசிக் குவலயத்தைச் சுற்றிவரும்
பச்சைத் தமிழரின் பண்பு.

புதுவை. தி. விஜயன், ஏரிப்பாக்கம்.

தண்புனல் சூழத் தழைகின்ற பைங்கூழாம்
வண்புலம் பெற்றிருந்தும் வற்கடத்தால்-வெம்புகிற
உச்சநிலை மாற்ற துபதேச மாற்றுவதோ
பச்சைத் தமிழரின் பண்பு ?

—. வடிவேலன், வேலாயுதம்பாளையம்.

மனையரசி இல்லாச்சீ மான்காம ராசர்
புனையரசி யல்நடத்தப் போந்தார்-தினையளவும்
மெச்சும் மறமற்று மேன்மானம் போக்குதே
பச்சைத் தமிழரின் பண்பு !

பொன்முருகுமணியடியான், கோதைமங்கலம்.

இமிழ்கடல் நற்றமிழ் நாடென்(று) எம்மின்
தமிழ்இலக்கி யத்திலுண்டோ யென்று-கமழ்ந்திடும்
இச்செகத்தின் நற்புகழை வெட்டி இறைப்பதோ
பச்சைத் தமிழரின் பண்பு.

—எஸ். சேந்தன், திருக்கழுக்குன்றம்.

அகன்ஞால முற்று மளிக்கப் பெறினும்
இகழெனின் கொள்ள லிசையார்-புகழெனின்
நச்சை யளிப்பினும் நாடி யருந்தலே
"பச்சைத்" தமிழரின் பண்பு.

—கா. சண்முகம், பாம்பூர்.

"குற்றேவல் செய்யக் குடிதேடி வந்தவரைக்
கொற்றவராய் வைத்தோம், குவலயத்தில்;-இற்றைநாள்
குச்சைப் பிரித்து, குடிகெடுக்க எண்ணுவதோ
பச்சைத் தமிழரின் பண்பு."

—கோ. திருவுடைநம்பி, கோவை.

உரியகாலத்தில் வெளிவரும்

மார்ச்சு முல்லையில்

கண்ணதாசன் எழுதும் செஞ்சொற்கவிதையுடன் சோதிட பாஸ்கரன், வாழ்வளித்த தெய்வம், ஓவியன் உள்ளம், சாவிலே வாழ்கிறோம், கானல்நீர் முதலிய உள்ளம் தொடும் சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

இப்படியும் இருக்கலாம், குருதி கொதிக்கும் கொடுமை, இது இன்று கேலிக்குரியது முதலிய சிறப்புப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

நாரா. நாச்சியப்பன் எழுதும் "ஜாரின் வீழ்ச்சி" வரலாற்றுச் சித்திரம் இடம்பெற்றுள்ளது. அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி எழுதும் சிந்தனையை கிளரும் "கி. பி. 2000-த்தில்" தொடர் கட்டுரை இந்த இதழ் முதல் வெளிவருகிறது.

உங்கள் இதழுக்கு முந்துங்கள்.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளராக விரும்புவோர் விண்ணப்பிக்க.

"முல்லை"
சென்னை-6.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு,
தொலைபேசி எண் 83510,